# உள்ளடக்கம்


| | வகைகள் | பக்க இல. |
|---|---|---|
| 1. | நிலையியற் சபைத் தகவல்கள் | 01 |
| 2. | தகவல் அறியும் உரிமை | 04 |
| 3. | நோக்கு மற்றும் பணிக்கூற்று | 05 |
| 4. | பிரதான செயற்சாதனைச் சுட்டி | 07 |
| 5. | தலைவரின் வாழ்த்துச் செய்தி | 13 |
| 6. | பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி | 18 |
| 7. | பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் | 21 |
| 8. | உயர் முகாமைத்துவம் | 22 |
| 9. | இடைநிலை முகாமைத்துவம் | 23 |
| 10. | பணிப்பாளர்களின் அறிக்கை | 24 |
| 11. | பணிப்பாளர்களின் செய்தி | 29 |
| | கரையோர நீர்வாழின அபிவிருத்தி பணிப்பாளரின் மதிப்பீடு | 29 |
| | நன்னீர் நீர்வாழின அபிவிருத்தி பணிப்பாளரின் மதிப்பீடு | 33 |
| | விரிவாக்கல் பிரிவின் பணிப்பாளரின் மதிப்பீடு | 36 |
| | நீரியல் வாழ் பொறியியல் பணிப்பாளரின் மதிப்பீடு | 38 |
| 12. | மானிட வள அறிக்கை | 39 |
| 13. | கணக்காய்வு முகாமைத்துவக் குழு அறிக்கை | 41 |
| 14. | கணக்காய்வாளரின் அறிக்கை | 44 |
| 15. | நிதிக் கூற்றுக்கள் | 63 |

# 1. நிலையியற் சபைத் தகவல்கள்

### பதிவுப் பெயர்

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை

### சட்டப் பின்னணி

1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை 1999 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இலங்கையில் நீரியல் வாழ் உயிரின விருத்தி உட்பட அது சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பது இந்நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாக அமைந்துள்ளன. இந்நிறுவனம் தற்போது கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

### பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

தலைமை அலுவலகம்
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலவத்த,
பத்தரமுல்ல, இலங்கை
தொலைபேசி : 0112786575 / 0112786495
பெக்ஸ் : 0112786575
மின்னஞ்சல்: www.naqda.gov.lk

❖ **நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம் - நீ.வா.செ.அ.ம.நி.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ஆர்.எம். கீர்திசிரி (நன்னீர்)<br>இங்கினியாகல நீ.வா.செ.அ.ம.நி. | - | உதவிப் பணிப்பாளர் (நன்னீர்)<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், இங்கினியாகல |
| 2. | திரு. சி.எஸ்.ஜ. பத்திரன (நன்னீர்)<br>தம்புள்ள நீ.வா.செ.அ.ம.நி. | - | உதவிப் பணிப்பாளர் (நன்னீர்)<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், தம்புள்ள |
| 3. | திரு. கே.எம்.டி.எம். சோமரத்ன (காப்)<br>உடவளவ நீ.வா.செ.அ.ம.நி. | - | உதவிப் பணிப்பாளர் (நன்னீர்)<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், உடவளவ |
| 4. | திரு. எச்.கே. ஜகத் கீர்த்தி (திலாப்பியா)<br>உடவளவ நீ.வா.செ.அ.ம.நி. | - | நிலையப் பொறுப்பாளர்<br>திலாப்பியா இனப்பெருக்க மத்திய நிலையம் உடவளவ |
| 5. | திரு. ஆர்.எச். பொதுவில<br>கலாவெவ (தே.உ.மீ மற் நீ.வா.செ.ப.நி.) | - | உதவிப் பணிப்பாளர் (பயிற்சி)<br>தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை பயிற்சி நிறுவகம், விஜிதபுர, கலாவெவ |
| 6. | திரு. டி.சி.ஈ. விஜயஹேவா<br>நுவரெலியா நீ.வா.செ.அ.ம.நி. | - | நிலையப் பொறுப்பாளர்<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், பபறகெலே, நுவரெலியா |
| 7. | திரு. எம்.யு.டப். முதுநாயக்க (நன்னீர்)<br>முறுதவெல நீ.வா.செ.அ.ம.நி. | - | உதவிப் பணிப்பாளர் (நன்னீர்)<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், யூளம்பிட்டிய, முறுதவெல |
| 8. | திரு. கமல் பிரதீஷ்<br>இரணைமடு நீ.வா.செ.அ.ம.நி. | - | நிலையப் பொறுப்பாளர்<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், யு9 வீதி, வட்டக்கச்சி, இரணைமடு |

❖ **மாவட்ட நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் அலுவலகம்/கிராமிய நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் அலுவலகம் - மா.நி.வா.செ.ப.அ./கி.நீ.வா.செ.அ.அ.ச.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டப்.ஏ.ஜே.ஆர்.பர்னாந்து<br>அம்பாறை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், கல்கந்த மாவத்தை, அம்பாறை |
| 2. | திரு. எஸ்.ஜி.சி. சிசித குமார<br>அனுராதபுரம் | மா.நீ.வா.செ.ப.அ. (பதில்) | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், தேவற சன்ஸ்தா வீதி, அனுராதபுரம் |
| 3. | திரு. ஆர்.ஜி.பி. மடுகல்ல<br>பதுளை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், 17, கனுவ, பதுளை வீதி, மாபகடவெவ |
| 4. | திரு. ஜே. நெல்சன்<br>மட்டக்களப்பு | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், கச்சேரி, மட்டக்களப்பு |
| 5. | திரு. டி.எம்.எம்.ஜயரத்ன<br>கொழும்பு | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலவத்த, பத்தரமுல்ல |
| 6. | திரு. ஜே.ஆர்.டி. சம்பத்<br>கம்பஹா | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், கச்சேரி, கம்பஹா |
| 7. | திரு. என்.எச்.கே. கீர்த்திரத்ன<br>காலி | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், தீவறசன்ஸ்தா கட்டடம், மாகல்ல, காலி |
| 8. | திரு. ஜீ.எம்.ஏ.ஜீ.சந்ரரத்ன<br>ஹம்பாந்தோட்டை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், அகுனவெவ, காத்தகடுவ, ரன்ன |
| 9. | திரு. எச்.எஸ்.டப்.ஏ. லியனகே<br>களுத்துறை | அ.கொ.பொ.செ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், இல 294, வீரரத்ன கட்டடம், காலி வீதி, களுத்துறை வடக்கு |
| 10. | திரு. ஜே.டி. சந்திரதாஸ<br>கண்டி | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், மாவட்ட செயலாளர் அலுவலகம் கண்டி |
| 11. | திரு. கே.ஜி.ஜ.பி.கே. கோரளேகம<br>கேகாலை | | மா.நீ.வா.செ.ப. அலுவலகம் 193/1/1 பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை |
| 12. | திரு. ஜே.எம்.ஜே.செனரத்<br>குருநாகல் | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், பிங்கிரிய |
| 13. | திரு. கே. நிதிலன்<br>கிளிநொச்சி/மன்னார் | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், A9 வீதி, கிளிநொச்சி |
| 14. | திரு. ஐ.எஸ்.டி.கே.ஜயவர்தன<br>மாத்தளை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், நீரியல் வாழ் அபிவிருத்தி மத்திய நிலையம், இப்பன்கட்டுவ, தம்புள்ள |
| 15. | திரு. கே.டி. சஞ்ஜீவ<br>மாத்தறை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், குருந்துவத்த வீதி, எலியகந்த, மாத்தறை |
| 16. | திரு. கே.எம். கபில பண்டார<br>மொனராகலை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், ஸ்ரீ விஜயபுர மொனராகலை |
| 17. | திரு. மதுரங்க வி. சமரக்கோன்<br>நுவரெலியா | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம், கச்சேரி, நுவரெலியா |

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. ஏ.ஏ.பி. அதாவுத<br>பொலன்னறுவை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம்,<br>28 வது மைல் கல், பொலன்னறுவை |
| 19. | திரு. கே.எம்.ஏ.எம். தயானந்த<br>இரத்தினபுரி | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம்,<br>நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி<br>மத்திய நிலையம்<br>(திலாப்பியா) உடவளவ |
| 20. | திரு. ஏ.எச்.எம்.விமலரத்ன<br>புத்தளம் | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம்,<br>விடுதி வீதி, பத்துலுஓயா |
| 21. | திரு. ஜி.ஏ.யு.ஆர்.கனேபொல<br>திருகோணமலை | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம்,<br>மாவட்ட செயலக அலுவலகம்<br>திருகோணமலை |
| 22. | திரு. வை. நிசாந்தம்<br>வவுனியா | மா.நீ.வா.செ.ப.அ. | மா.நீ.வா.செ.ப. அலுவலகம்,<br>கச்சேரி, வவுனியா |

### ❖ நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம்<br>பம்பல | திரு.பீ.எம்.பீ.கிரிஷாந்த | நிலையம் பொறுப்பாளர்<br>நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம்<br>பம்பல, காக்கப்பல்லிய |
| 2. | நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம்<br>கஹந்தமோதர | திரு.எஸ்.எச்.ஏ.சிரிகுமார | உதவிப் பணிப்பாளர் (நன்னீர்)<br>நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம்<br>தில்லவடவன,கஹந்தமோதர, ரன்ன |
| 3. | நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம்<br>கல்லராவ | திரு.டப்.கே.பீ.பிரியந்த | நிலையம் பொறுப்பாளர்<br>நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம்<br>கல்லராவ |

### ❖ அலங்கார மீன் இனப்பெருக்க நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| 4. | அலங்கார மீன் இனப்பெருக்க நிலையம்<br>கினிகத்ஹேன | திரு.எஸ்.ஆர்.டி.பண்டார | நிலையம் பொறுப்பாளர்<br>அலங்கார மீன் இனப்பெருக்க நிலையம்<br>அம்பகமுவ, உடபுலத்கமுவ |
| 5. | அலங்கார மீன் இனப்பெருக்க நிலையம்<br>ரம்படகல்ல | திரு.ரொஹான் | நிலையம் பொறுப்பாளர்<br>அலங்கார மீன் இனப்பெருக்க நிலையம்<br>ரம்படகல்ல, பானகமுவ |

### ❖ கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 6. | கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு<br>விரிவாக்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>பத்துலுஓய | திரு.ஜெ.ஏ.சமிந்த | உதவிப் பணிப்பாளர்<br>கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு<br>விரிவாக்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>தானாயகம வீதி, பத்துலுஓய |
| 7. | கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு<br>விரிவாக்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>மட்டக்களப்பு | திரு.எஸ்.ரவிகுமார் | உதவிப் பணிப்பாளர்<br>கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு<br>விரிவாக்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>கடற்கரை வீதி, புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு |
| 8. | கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு<br>விரிவாக்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>கிளிநொச்சி | திரு.பீ.நிருபராஜ் | உதவிப் பணிப்பாளர்<br>கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு<br>விரிவாக்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு<br>A9 வீதி, கிளிநொச்சி |

### ❖ பல்லின கடல்வாழ் செட்டை மீன் இனப்பெருக்க நிலையம்

| | | | |
|---|---|---|---|
| 9. | பல்லின கடல்வாழ் செட்டை மீன்<br>இனப்பெருக்க நிலையம்<br>மட்டக்களப்பு | திரு.ஈ.எம்.புத்திக | நிலையம் பொறுப்பாளர்<br>பல்லின கடல்வாழ் செட்டை மீன்<br>இனப்பெருக்க நிலையம்<br>தர்மபுரம், கிரின்குலம், மட்டக்களப்பு |

## 2. தகவல் அறியும் உரிமை - த. அ. உ.

2016 இலக்கம் 12 கொண்ட தகவல்களை பெற்றுக் கொள்ளும் உரிமை தொடர்பான சட்டத்திற்கமைய இலங்கை தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தகவல்களை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| உத்தியோகத்தர் பெயர் | அலுவலக முகவரி | தொலைபேசி இல. | பெக்ஸ்/ஈ-மெயில் |
|---|---|---|---|
| 1. திருமதி ஜே.எம். அசோகா | தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலவத்த, பத்தரமுல்ல. | 071-4397722<br>0112786578 | directorcad@naqda.gov.lk |
| 2. திரு. எச்.எம்.யு.கே. பி.பி. ஹேரத் | | 071-4397798<br>0112786494 | directorfw@naqda.gov.lk |
| 3. திருமதி கே.பி.சி. புஸ்பலதா | | 071-8661416<br>0112786579 | directorext@naqda.gov.lk |
| 4. திரு. டப்.எம்.ஐ. விஜேசேகர | | 071-9362755<br>0112786493 | adhr@naqda.gov.lk |
| 5. திரு. கே.என்.ஏ திசாநாயக்க | | 075-8293773<br>0112786575 | directorfinance@naqda.gov.lk |

# 3. நோக்கு மற்றும் பணிக்கூற்று

## நோக்கு

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதற்காக உணவு வகைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் நீரியல் வாழ் செய்கை மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த வலயத்தின் அதிஉயர் நிறுவனமாகச் செயற்படல்.



## பணிக்கூற்று

நன்னீா் மற்றும் உவா் நீா் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதனைப் போன்று சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு வா்த்தகத் தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்காக நீரியல் வளத்தைப் பயன்படுத்தும் வகையில் புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப் படுத்துவதன் ஊடாக வறுமையினை ஒழித்து கிராமிய மக்களின் சமூகப் பொருளாதாரத் தரத்தினை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குவது எமது பணியாகும்.



# 4. பிரதான முன்னேற்றச் சுட்டி

உள்நாட்டு மீன் வளர்ப்பின் மூலம் மீன் உற்பத்தி - மெ. தொன்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு மீன் வளர்ப்பின் மூலம் மீன் உற்பத்தி | 52,410 | 59,560 | 68,950 | 66,910 | 75,750 | 67,300 | 73,930 | |

ஆண்டு

நன்னீர் இறால் சினைக்குப் பின்னரான கட்டம் மற்றும் மீன் குஞ்சு இருப்பு - மில்லியன்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| நன்னீர் இறால் சினைக்குப் பின்னர் | 12 | 11 | 15 | 20 | 10 | 22 | 38 |
| மீன் குஞ்சு | 34 | 45 | 37 | 49 | 39 | 54 | 66 |

ஆண்டு

குஞ்சு உற்பத்தி - மில்லியன்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| மீன்குஞ்சி உற்பததி செய்யும் சிறிய பண்ணைகள் | 8 | 8 | 6 | 6 | 4 | 7 | 10 |
| நீரியல் வாழ் செய்கை குஞ்சு உற்பத்தி | 14 | 20 | 21 | 35 | 31 | 40 | 37 |
| PPOs மீன் குஞ்சு உற்பத்தி | 12 | 15 | 10 | 8 | 5 | 6 | 4 |
| கூடுகள் / வேலிகள் | 1 | 1 | 1 | 0 | 1 | 2 | 18 |
| மொத்தம் | 35 | 45 | 37 | 49 | 41 | 55 | 70 |

ஆண்டு

குடம்பி உற்பத்தி மற்றும் விநியோகம் - மில்லியன்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| சிறிய பண்ணை மூலம் குடம்பி விற்பனை | 16 | 18 | 11 | 13 | 7 | 12 | 16 |
| AQDCs மூலம் வளர்க்கப்பட்ட குடம்பிகள் | 16 | 29 | 40 | 63 | 55 | 51 | 58 |
| PPOs இற்கு குடம்பி விற்பனை | 26 | 35 | 24 | 22 | 12 | 16 | 9 |
| கூடுகள் மற்றும் தொட்டிகளில் வளர்க்கப்பட்ட | 2 | 2 | 1 | 1 | 2 | 10 | 30 |
| மொத்தம் | 61 | 83 | 76 | 98 | 76 | 88 | 112 |

ஆண்டு

சினைக்குப் பின்னரான உற்பத்தி - மில்லியன்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| சினைக்குப் பின்னரான உற்பத்தி | 93 | 127 | 146 | 149 | 116 | 116 | 137 |

ஆண்டு

## ஏற்றுமதி அளவு மற்றும் இறால் மதிப்பு




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் ஏற்றுமதி அளவு மெ. தொன் | 1,262 | 1,380 | 1,056 | 1,625 | 2,001 | 1,341 | 1,667 |
| இறால் ஏற்றுமதி மதிப்பு மில்லியன் | 1,521 | 1,799 | 1,618 | 2,521 | 3,375 | 1,971 | 2,464 |

ஆண்டு

## அலங்கார மீன் ஏற்றுமதி மதிப்பு - மில்லியன்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| அலங்கார மீன்களின் ஏற்றுமதி மதிப்பு | 920 | 1,112 | 865 | 1,383 | 1,636 | 2,392 | 1,847 |

ஆண்டு




| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 920 | 2,198 | 1 804 | 3,110 | 2,852 | 5,767 | 5,649 | 10,310 | 5,924 | 4,884 | 7,406 | 27,505 | 37,363 | 42,377 | 56,295 | 57,134 | 95,585 | 10525 |

ஆண்டு




| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏனைய வருமானம் | - | - | - | - | - | 8,771 | 9,161 | 46,051 | 36,074 | 55,052 | 69,951 | 41,082 | 26,508 | 39,371 | 43,076 | 43,320 | 51,942 | 58,896 |

ஆண்டு




| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திறைசேரி வழங்கல் - மீண்டெழும் | | | | | | | | | 45 | 67 | 50 | 50 | 60 | 91 | 90 | 95 | 100 | 150 |
| திறைசேரி வழங்கல் - மூலதனம் | 24 | 36 | 39 | 40 | 37 | 42 | 55 | 81 | 118 | 136 | 154 | 161 | 171 | 179 | 208 | 215 | 313 | 340 |

ஆண்டு

### இலாபம் ஊடாக ரூபா மில்.




| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த இலாபம் | 920 | 2,198 | (14,265 | (12,923 | (3,398) | (27,795 | (7,986) | (34,403 | (42,168 | (53,597 | (67,996 | (40,318 | (28,955 | (14,216 | (16,969 | (3,171) | 12,582 | 312 |

ஆண்டு

### நிர்வாகச் செலவினம் ரூபா ’000




| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிர்வாகச் செலவினம் | 34,947 | 46,670 | 39,522 | 42,906 | 49,772 | 55,343 | 82,820 | 96,574 | 128,424 | 157,614 | 168,344 | 189,075 | 212,826 | 237,040 | 264,473 | 297,410 | 389,847 | 453,323 |

ஆண்டு

### சொத்து அடிப்படையில் ரூபா ’000




| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Current Assets | 1,172 | 3,323 | 9,458 | 10,835 | 16,816 | 29,935 | 20,081 | 28,034 | 42,278 | 60,707 | 66,046 | 67,949 | 63,645 | 49,330 | 59,572 | 75,395 | 145,207 | 195,536 |
| Work in progress | 90,704 | 100,266 | 44,960 | 49,316 | 20,428 | 25,301 | 43,115 | 84,631 | 67,108 | 63,134 | 58,167 | 43,679 | 43,679 | 78,375 | 43,679 | 47,187 | 17,463 | 55,821 |
| Fixed Assets | 242,248 | 237,682 | 331,650 | 318,194 | 353,849 | 335,131 | 339,379 | 335,777 | 384,653 | 387,067 | 632,512 | 706,939 | 715,823 | 707,418 | 751,487 | 764,024 | 1,109,244 | 1,096,582 |
| Total Assets | 334,124 | 341,271 | 386,067 | 378,345 | 391,094 | 390,367 | 402,575 | 448,442 | 494,038 | 510,907 | 756,725 | 818,566 | 823,147 | 835,124 | 854,738 | 886,606 | 1,271,913 | 1,347,938 |

ஆண்டு

2015 ஆம் ஆண்டுக்கான பங்கு மற்றும் பொறுப்புக்கள் - ரூபா ’000




2016 ஆம் ஆண்டுக்கான பங்கு மற்றும் பொறுப்புக்கள் - ரூபா ’000






# 5. தலைவரின் வாழ்த்துச் செய்தி

**2016 ஆம் ஆண்டுக்காக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) வருடாந்த அறிக்கை**

2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) வருடாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்கறிக்கை பணிப்பாளர் சபை சார்பில் சமர்ப்பிக்க வாய்ப்புக் கிடைத்தமையை இட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் கூடுதலாக அமைந்துள்ள நீர்த்தேக்கங்கள், வாவிகள் மற்றும் நீர் மூலங்கள் ஊடாக சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நன்னீர் கடற்றொழில் கைத்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கைப் பிரிவு எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக கிடைக்கப் பெற்றுள்ள மிகவும் பெறுமதிமிக்க சொத்தாகக் காணப்படுகின்றது. தொன்றுதொட்டு எமது தேசத்தின் வறண்ட பிரதேசங்களில் பிரதானமாக அமைந்துள்ள கிராமியப் பிரதேசங்களில் நீர்த்தேக்கங்களுக்கு அண்மையில் வாழ்ந்த மக்களின் பிரதான வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தின் செயற்பாடாக நன்னீர் மீன்பிடித் தொழில் காணப்பட்டது. தற்போது சுமார் 54,000 க்கு மேற்பட்டோர் இப்பிரிவின் மூலம் நேரடி தொழில் வாய்ப்புக்களை பெற்றுள்ளதுடன் மேலும் பலர் அது சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். சமீபகாலத்தில் நீரியல் வாழ் செய்கை எனப்படும் மீன் உற்பத்தியின் மூலம் எமது நாட்டிற்கு கூடுதலான அந்நிய நாட்டுச் செலாவணியை உழைக்க மிகவும் பலம் பொருந்திய பங்களிப்பு வழங்கப்பட்ட துறையாக இப்பிரிவு காணப்படுகின்றது.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) 1999 ஆம் ஆண்டில், 1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுடன் இலங்கையில் நீரியல் வாழ் செய்கை மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்திற்குட்படுத்துவது தொடர்பிலும் அது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலுமான பொறுப்பு இவ் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ் அதிகார சபை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் செயற்படுவதுடன் அதிகார சபையின் பிரதான பணிகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவறு அமைகின்றன.

- உள்ளக நீர்த் தேக்கங்களை உருவாக்குவதற்காக பொருத்தமான விசேட மீன் வகைகளை இனங்காணல்.
- இனப்பெருக்க முறைகளை விருத்தி செய்தல் மற்றும் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல்.
- மீன் சினை உற்பத்தியினை மேம்படுத்தல்.
- விஞ்ஞான முறையினை பின்பற்றுவதன் மூலம் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை முகாமைத்துவதிற்கு உட்படுத்தல்.
- நீரியல் வாழ் செய்கைப் பிரிவின் சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு தனிநபர் / அரச துறைக்குரிய தொழில் முயற்சியினை தாபிப்பதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் அவற்றை விருத்தி செய்தல்.
- கூனி இறால் செய்கையினை விருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வைக்குட்படுத்தல்.
- அலங்கார மீன் கைத்தொழிலை விருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வைக்குட்படுத்தல்.
- கடல் வாழ் மீன் செய்கை, நண்டு செய்கை, கடல் அட்டை செய்கை, மட்டி செய்கை, கடல்பாசி செய்கை போன்ற புதிய நீரியல் வாழ் செய்கை முறைகளை அறிமுகப்படுத்தல்.

இதற்கு மேலதிகமாக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) மூலம் தேவையான பயிற்சிகளை வழங்குதல், தொழில்நுட்பப் பரிமாற்றல்களை மேற்கொள்ளல், விரிவாக்க சேவைகளை வழங்குதல் போன்ற தரப்பினர்களுக்கிடையிலான இணைப்புக்களை மேற்கொள்வதன் மூலம் நன்னீர் மீன்பிடி அமைப்புக்கள் மற்றும் நீரியல் வாழ் செய்கை அமைப்புக்களின் கொள்ளளவை மேம்படுத்துவதற்கான ஆரம்பச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை நிலையான அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதற்காக சூழலுக்கு உகந்ததைப் போன்று சமூக ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிசிறந்த முகாமைத்துவ ஒழுங்குகளை பின்பற்றுவதன் ஊடாக

தற்போது காணப்படும் நீரியல் வாழ் வளத்தினை பயன்படுத்துவது தொடர்பில் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உரிய கவனத்தைச் செலுத்தியுள்ளது.

- கிராமிய சமூகங்களுக்கிடையே உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தியினை நியாயமான விலைக்கு வழங்குவதன் மூலம் கிராமிய மக்களின் போசாக்குத் தரத்தை மேம்படுத்தல்.
- கிராமிய மக்களுக்காக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும் இதன் மூலம் பங்களிப்புக்கள் வழங்கப்படுவதுடன் மொத்த தேசிய உற்பத்தியை பயன்படுத்துவதற்காக பங்களிப்புக்கள் வழங்குவதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டல் 2016 ஆம் ஆண்டில் நன்னீர் மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியாக ரூபா. 16.34 பில்லியன் காணப்பட்டதுடன் அதன் மூலம் தேசிய பொருளாதார விருத்திக்காக கிராமியத் துறையின் பாரிய முன்னேற்றகரமான பங்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வெளிநாடுகளில் உயரிய கேள்விகள் காணப்படும் வறண்ட வலயங்களில் அலங்கார மீன், இறால், நண்டு, கடல் அட்டைகள், கடல்பாசி மற்றும் ஏனைய நீரியல் வாழ் செய்கை உற்பத்திகள் போன்றன பல்வேறு வகைகளில் நீரியல் வாழ் உற்பத்தியினை ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடுதலான பெறுமதியினைக் கொண்ட அந்நிய நாட்டுச் செலாவணியினை உழைப்பதற்காக இலங்கையர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் பிரதானமாக இறால் மற்றும் அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் 4,311 மில்லியன் அந்நிய நாட்டுச் செலாவணியை உழைக்க முடிந்தது.

இதனால் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையர்களுக்கு மிகவும் அதிசிறந்த சமூக மற்றும் பொருளாதார பிரதிலாபங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றன.

2016 ஆம் ஆண்டில் நன்னீர் மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி 73,930 தொன் என்பதுடன் இவ் உற்பத்தி மட்டம் 2015 ஆம் ஆண்டின் உற்பத்தி மட்டத்தை விட 10% அதிகரிப்பு விகிதாசாரத்தை எட்டிக் காணப்பட்டது. சமூகப் பங்கேற்பு மூலம் நீர்த்தேக்கங்களில் உரியவாறு முகாமைத்திற்குட்படுத்தல், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சிறிய இனப்பெருக்க மத்திய நிலையங்களைத் தாபித்தல், மீன் சினை உற்பத்தியினை மேம்படுத்தல், மீன் குடம்பிகளை வெளியேற்றும் போது படகுகள் உட்பட மீன்பிடிப்பதற்காக பயன்படுத்தும் உபகரணங்களை விநியோகிக்கவும், மீனவர்களின் திறமைகளை விருத்தி செய்யும் போது மிகுந்த தளர்த்தப்பட்ட யோசனை முறையினை அமுல்படுத்தல் உள்ளிட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த கடற்றொழில் வேலைத்திட்டங்கள் கணிசமாக அமுல்படுத்தப்பட்டுமையினால் 2016 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் உயரிய செயற்சாதனைகளை எட்ட முடிந்தது.

“வெள்ளைப் புள்ளி” நோய் காரணமாக இழந்த இறால் செய்கைக் கைத்தொழில் தற்போது முன்னர் காணப்பட்ட உற்பத்திக் கொள்ளளவை எட்டியுள்ளதை கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதுடன் கூனி இறால் செய்கை முறை மட்டக்களப்பு மாவட்டத்திலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சம்பிரதாயபூர்வம் அல்லாத நீரியல் வாழ் செய்கை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சிறியளவு தொழில்முயற்சியாளர்களின் ஆர்வம் விருத்தி செய்யப்படுவதாக குறிப்பிடுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததை இட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். கடல் அட்டை இனப்பெருக்கம் மற்றும் கடல்பாசி செய்கை தொடர்பில் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல் உட்பட முன்னோடிச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) முயற்சிகளை மேற்கொண்டதற்கமைய எதிர்வரும் ஆண்டுகளிலும் கடல் அட்டை உட்பட கடல் பாசி செய்கையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். முன்னனி நிறுவனம் மூலம் கடல்பாசி உற்பத்தி ஏற்றுமதி செய்வதனை இலக்காகக் கொண்டு சமூகப் பங்கேற்பினைப் பெற்று கடல் பாசி செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சீபாஸ் (Sea Bass) மீன் கூடுகளில் செய்கைகளை மேற்கொள்ளும் கலாசாரத்தினை அடிப்படையாகக் கொண்டு கடல் வாழ் மீன் செய்கைக்கு முதலீட்டாளர்களுக்கிடையே கூடிய ஆர்வம் காணப்படுகின்றது. ஒருசில சமூக மற்றும் கலாசார தடைகளை கிரமமாக கட்டுப்படுத்தி உணவுக்காக பெற்றுக் கொள்வதற்காக வாவிகளில் சிறியளவு மீன் செய்கை மேற்கொள்வது விருத்தியடைந்து வருவதுடன் நீரியல் வாழ் செய்கைப் பிரிவின் மிகுந்த சாதகமான மற்றும் ஊக்குவிப்புக்களில் சிறிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஏற்படுத்தி கொள்ளப்படும் விசேட மீன் வகைகளை விரிவுபடுத்தல் மற்றும் ஏற்றுமதிக்கான பொருத்தமான தரத்திற்கு பண்புசார் தரத்தை விருத்தி செய்வதுடன் அலங்கார மீன் செய்கை துரிதமாக விருத்தியடைந்து வருகின்றது. உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் நோக்கங்களுக்கிடையே

சமநிலையைப் பேணி அந்நோக்கங்களுக்கு அனுசரனையினை வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் அத்தரப்பினர்களுக்காக பரஸ்பர பிரதிலாபங்களைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவது இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) நோக்கமாகும்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களின் மூலம் கிடைக்கப் பெற்ற பிரதிலாபங்கள் தொடர்பாக விசேடமாக குறிப்பிடுவது அத்தியாவசியமாகும்.

- நீர்த்தேக்கங்களுக்கு அருகாமையில் வசிக்கும் மீனவர்களின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்தியதைப் போன்று புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட "குளத்துடன் கிராமம்" வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக திருப்திகரமான முன்னேற்றங்களை எட்ட முடிந்துள்ளது. இவ் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் பணிகளும் இடம்பெறுகின்றன.
- ஜனாதிபதி செயலக அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "புத்தெழுச்சி பெறும் பொலன்னறுவை" வேலைத்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் மற்றும் மாவட்ட நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் அலுவலகத்தை தாபிக்கும் பணிகள் இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- தரமான உணவினைப் பயன்படுத்தி தன்னிறைவடைந்த நிலைமைக்கு மாற்றியமைப்பதற்காக ஜனாதிபதி செயலக அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டம் 2016 - 2018" இன் கீழ் புதிய இனப்பெருக்க மத்திய நிலையம் மற்றும் இனப்பெருக்க நிலையத்தைத் தாபித்தல், காணப்படும் மத்திய நிலையங்களின் வசதிகளை விரிவுபடுத்தல், மீன் குடம்பிகளை உருவாக்குதல், தோட்டங்களில் நீரியல் வாழ் செய்கையினை ஊக்குவித்தல் போன்ற பல செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## மூலஉபாய நோக்கங்கள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புக்கள்

2016 ஆம் ஆண்டில் தேசிய தனிநபர் மீன் நுகர்வு 43.4 கிராம் என்பதுடன் நன்னீர் மீன் கைத்தொழில் உட்பட நீரியல் வாழ் செய்கை மூலம் கிடைக்கும் பங்களிப்பினை மேம்படுத்துவதன் ஊடாக நாளாந்தப் பயன்பாட்டினை மேம்படுத்துவது எமது எதிர்பார்ப்பு என்பதுடன் அதற்கமைய பரிந்துரை செய்யப்பட்ட நாளாந்த மீன் நுகர்வு மட்டமான 60 கிராம் வரை நுகர்வு மட்டத்தை மேம்படுத்துவதற்காக நன்னீர் கடற்றொழில் கைத்தொழில் உட்பட நீரியல் வாழ் செய்கை மூலம் கிடைக்கும் பங்களிப்புகளை மேம்படுத்துவது எமது இலக்காக மாற்றம் பெற்றுள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் நன்னீர் கடற்றொழில் கைத்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை மூலம் பெற்றுக் கொள்ளும் உற்பத்தியினை 130,000 மெற்றிக்தொன் வரை மேம்படுத்துவதை போன்ற மேலதிக நேரடி மற்றும் மறைமுக அடிப்படையில் 40,000 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்குடன் இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) பல முக்கிய செயற்பாடுகளை அமுல்படுத்தியுள்ளது. சகல நன்னீர் நீர்த்தேக்கங்களையும் பயன்படுத்தி பயன்மிக்க அடிப்படையில் மீன் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக 300 மில்லியன் மீன் குடம்பிகள் மாத்திரம் அவசியப்படுவதாக மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், ஆண்டு ஒன்றிற்கு மீன் குடம்பிகள் சுமார் 70 மில்லியன் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது. காணப்படும் மத்திய நிலையங்களைப் புணரமைத்தல் மற்றும் விரிவுபடுத்துவதன் ஊடாக அம்மத்திய நிலையங்களில் மீன் இனப்பெருக்க கொள்ளளவினை விருத்தி செய்தல், புதிய இனப்பெருக்க மத்திய நிலையத்தைத் தாபித்தல், மீன் இனப்பெருக்க நிலையங்களின் மரபணு பல்வகைத் தன்மையினை விருத்தி செய்தல் மற்றும் மரபணுவினை மேலும் விருத்தி செய்தல், சிறிய மீன் தளங்கள், தனியார் வாவிகள் மற்றும் மீன் கூடுகளை தாபித்தல், நீரை அடிப்படையாகக் கொண்ட இனப்பெருக்க நிலையங்களைத் தாபித்தல் போன்ற அமுல்படுத்தும் செயற்பாட்டுத் தொடர்கள் மூலம் மீன் குடம்பிகளில் கூடுதலானவற்றை உற்பத்தி செய்யத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நீர்த்தேக்க கூடுகளுக்குள் குடம்பிகளுக்குப் பதிலாக குஞ்சிகளை இடும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் நாம் உரிய வேலைத்திட்டத்தை வகுத்துள்ளோம். 2018 ஆம் ஆண்டளவில் இடப்படும் குடம்பிகளின் அளவினை 100 மில்லியன் வரை அதிகரிப்போம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் மீனவர்களின் / விவசாயிகளின் நிதி வருமானக் கொள்ளளவு மேம்படும் என நாம் எதிர்பார்க்கிறோம். வீழ்ச்சியடைந்த இறக்குமதியின் மூலம்

கூடுதலான அந்நிய நாட்டுச் செலாவணியினை சேமிக்க முடிந்துள்ளதுடன் இதன் மூலம் எமது தேசத்திற்கு மேலதிக வருமானம் கிடைக்கும்.

கஹந்தமோதர மற்றும் பம்பள பிரதேசங்களில் நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையங்களை விருத்தி செய்தல் மற்றும் திருகோணமலை புதிய இனப்பெருக்க மத்திய நிலையம் தாபித்ததை தொடர்ந்து நன்னீர் இறாலுக்குப் பின்னர் சினை எண்ணிக்கையின் தற்போதைய கொள்ளளவை போன்று மும்மடங்கினால் அதிகரிப்பதற்கும் இக் கொள்ளளவினை 120 மில்லியன் வரை விருத்தி செய்வதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் 1500 மில்லியன் ரூபா அந்நிய நாட்டுச் செலாவணியை உழைக்க எமக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

ஆண்டு பூராகவும் நீர் நிறைந்து காணப்படும் நீர்த்தேக்கங்கள் மற்றும் பருவகால நீர்த் தேக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கடற்றொழில் கைத்தொழிலை விருத்தி செய்வதை போன்று உயரிய பெறுமதி கொண்ட நீரியல் வாழ் உயிரினங்களை விசேட நீர்த்தேக்கங்களில் இட்டு விருத்தி செய்வதற்காகவும் இவ் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட கடற்றொழில் கைத்தொழில் முகாமைத்துவத்திற்காக உதவியினை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கிராமிய கடற்றொழில் கைத்தொழில் அமைப்புக்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அவ்வவ் மீன் கிலோகிராமிற்காக 20 ரூபா பங்களிப்பினைப் பெற்று குறைந்தபட்ச காலத்திற்குள் ரூபா 122 மில்லியனை நிதியத்திற்காக சேகரிக்க இச் சங்கங்களுக்கு முடிந்தது. இவ்வாறு கூடுதலாக நிதி சேகரிப்பது இச்சங்கங்களை ஊக்குவிப்பதற்கும் அதன் மூலம் தன்னிறைவடைந்த வாழ்வாதார முறைக்கு ஈடுபட்டு அரசாங்கத்தின் உதவிகளைப் பெற்று தங்கியிருக்கும் தேவையிலிருந்து மீட்சி பெற அவர்களுக்கு வழிகளை திறப்பதும் எமது எதிர்பார்ப்பாகும்.

தோட்டங்களில் வாழும் சமூகங்களின் போசாக்கு மட்டத்தை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) மூலம் தோட்ட வாவிகளில் நீரியல் வாழ் செய்கை வேலைத்திட்டங்கள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் சகல தோட்ட நீர்த்தேக்கங்களையும் புணரமைக்கவும் மேலும் ஒருசில ஆண்டுகளுக்குள் இந்நீர்தேக்கங்களில் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு கடற்றொழில் கைத்தொழிலை அறிமுகப்படுத்தவும் நாம் எதிர்பார்த்துள்ளளோம்.

2016 ஆம் ஆண்டு “நீரியல் வாழ் செய்கை பூங்காவனம்” மற்றும் “நண்டு நகரங்கள்” என்ற புதிய யோசனைத் திட்டத்தை அமுல்படுத்த எமக்கு இயலுமை கிடைத்துள்ளதுடன், நீரியல் வாழ் செய்கைக்காக முதலீடுகளை மேற்கொள்வதனை விருத்தி செய்தல் மற்றும் பொருத்தமான வசதிகளை வழங்குவதன் மூலம் சூழல் பேரழிவினை தவிர்த்து உணவுப் பாதுகாப்பு இலக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்தி இலக்கினை நிலையான அடிப்படையில் எட்டுவதற்கும் கரையோரம் சார்ந்த நீரியல் வாழ் உயிரினச் செய்கைகளை விருத்தி செய்வதற்கு இயலுமான முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான சூழலை வழங்குதல் ஆகிய நோக்கங்களை எட்டுவதற்காக மேற்கூறப்பட்டுள்ள புதிய சிந்தனை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் வேலைத்திட்டத்தை தாபிப்பதன் மூலம் நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் வழி கிடைக்கின்றது. கரையோரம் சார்ந்ததாக வாழும் சமூகத்தின் வருமான மட்டம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு இதன் மூலம் முடிவதுடன் கரையோரம் சார்ந்த நீரியல் வாழ் செய்கை உற்பத்தியினை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிகள் கிடைக்கின்றன.

சம்பிரதாயமல்லாத நீரியல் வாழ் செய்கை செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் எமது கவனம் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நீரியல் வாழ் செய்கை உற்பத்தியினை மேம்படுத்துவதைப் போன்று தொழில்நுட்ப அறிவினையும் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இப்பிரிவிற்காக கூடுதலான கவர்ச்சியினை ஏற்படுத்துவதும் எமது எதிர்பார்ப்பாகும்.

இச் சகல நவீன அபிவிருத்தி மூல உபாயங்களைப் பின்பற்றுவதன் மூலம் கிராமிய சமூகத்தின் போசாக்குத் தரத்தை மேம்படுத்துவதற்கும் கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்த எமக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

## மதிப்பீடு

கௌரவ கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சர் விஜித் விஜயமுனி சொயிசா மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி கௌரவ இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆரச்சி அவர்களுக்கும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார பிரதி அமைச்சர் அமீர் அலி ஷிஹாப்தீன் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளருக்கும், இராஜாங்கச் செயலாளருக்கும், கணக்காய்வாளர் மற்றும் அவரது பணியாளர் சபைக்கும் உரிய மேற்பார்வை நிறுவனங்களின் பொறுப்பாளர் உட்பட அவர்களின் ஊழியர் சபைக்கும், எனக்கு பல தரப்பட்ட முறைகளில் ஒத்துழைப்புக்களை வழங்கிய ஒத்துழைப்புக்கள், வழிகாட்டல்கள் தொடர்பிலும் நான் நன்றியினை தெரிவிக்கிறேன்.

இத்துடன் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களினால் இவ்வாண்டுக்குள் எனக்கு தொடர்ச்சியாக வழங்கிய அறிவுபூர்வமாக வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புக்களை உண்மையாகப் பாராட்டுவதுடன் பணிப்பாளர் நாயகம் ∴

பிரதம நிதி உத்தியோகத்தர் மற்றும் அவரின் முகாமைத்துவக் குழுவினால் அவர்களின் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்தி முகாமைத்துவ இயலுமைகள் உட்பட அற்பணிப்புக்கள் மூலமும் எனக்கு வழங்கிய அதிஉயரிய ஒத்துழைப்புக்கள் உட்பட பங்களிப்புக்கள் தொடர்பிலும் விசேடமாக குறிப்பிட இதனை சந்தர்ப்பமாகக் கொள்கிறேன்.

**திரு. நுவன் பிரசாந்த மாதவன் ஆரச்சி**
**B.Sc, M.Sc, MRDP**
**தலைவர்**

# 6. பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) இலங்கையில் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடிச் செய்கை உட்பட நீரியல் வாழ் உயிரினச் செய்கை மற்றும் நன்னீர் கடற்றொழில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள அரச துறைக்குரிய அமைப்பாகக் கருத முடியும். இப்பணியின் போது இதன் தரப்பினர்களின் நலன்புரி உட்பட அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் உரிய தரப்பினர்களின் வருமானத்தை மேம்படுத்துவது தொடர்பில் தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.




2015 ஆம் ஆண்டில் உற்பத்திக்கு இணைவாக நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் உயிரின செய்கை உற்பத்திப் பிரிவு 2016 ஆம் ஆண்டில் முன்னேற்றகரமான முறையில் விருத்தியடைந்துள்ளதுடன் 6,630 மெ.தொன் அதிகரிப்பினை பதிவு செய்து 73,930 மெ.தொன் வரை உற்பத்தி மட்டம் அதிகரித்துள்ளது. சமூகப் பங்கேற்பின் ஊடாக நீர் மூலங்களின் உற்பத்தித் திறனை முகாமைத்திற்குட்படுத்துவதற்கும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சிறிய இனப்பெருக்க மத்திய நிலையங்களை வெற்றிகரமான முன்னெடுத்தல், மீன் சினை உற்பத்தியினை விருத்தி செய்தல் உட்பட நீர்த்தெக்கங்களில் போதியளவு மீன் குடம்பிகின்ன எண்ணிக்கையை இடுவதைப் போன்று இச் செயற்சாதனையை எட்டுவதற்காக பங்களிப்பு வழங்கியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாகும். இது எவ்வாறாக இருப்பினும் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளமை உட்பட மீன் சினை உற்பத்திக்ககாக உயர் மட்டத்திலான குஞ்சிகள் குறைவடைவதைப் போன்று ஏடிசழை பக்றீரியா நோய்த் தொற்று மூலம் கூனி இறாலின் சினைகள் முதற் கட்டங்களிலேயே நோய்த் தாக்கத்திற்குட்படுவதனாலும் ஏரிகளில் உவர்த் தன்மை அதிகரித்துமையினாலும் இறால் செய்கையின் உற்பத்தி (மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக மட்டத்திலான நீரியல் வாழ் உயிரின செய்கைச் செயற்பாடு) குறைவு தடையாக அமைந்தது. இந் நிலைமைக்கு மத்தியில் 2016 ஆம் ஆண்டில் புத்தளம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கூனி இறால் 6300 மெ.தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் 69.77 மில்லியன் குடம்பிகள் தேசிய நீரியல் வாழ் உயிரின அபிவிருத்தி அதிகார சபையின் நீரியல் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்கள் (AQDCs), சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கள் மூலம் முகாமைத்திற்குட்படுத்தும் சிறிய உற்பத்தி தளங்கள் மற்றும் தனியார் வாவிகளில் உற்பத்தி செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டில் குடம்பி உற்பத்திக்கு இணைவாக இது (26%) அதிகரிப்பைக் காண்பிக்கின்றது. நீர்த்தேக்கங்களில் சினை - குடம்பிகளை உருவாக்குவதற்காக கூடுகளில் செய்கைகளை மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தலும் இவ் மீன் குடம்பி உற்பத்தி அதிகரிப்புக்கு பிரதான காரணமாகும்.

2016 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களில், வாவிகளில், ஏரிகளில் நன்னீர் இறால் உருவாக்குதல் 68% தினால் அதிகரித்துக் காணப்பட்டதுடன், பம்பல, கஹந்தமோதறையில் அமைந்துள்ள மீன் இனப்பெருக்க

மத்திய நிலையங்களைப் போன்று தனியார் இனப்பெருக்க மத்திய நிலையங்களிலும் அவ்வாறான சினைகள் பெறப்பட்டிருந்தன. 22 மில்லியன் என்ற தற்போதைய உற்பத்திக்கு இணைவாக நன்னீர் இறாலுக்குப் பின்னரான சினை உற்பத்தி 50 மில்லியன் வரை அதிகரிக்கவும் இது உதவியாக அமைந்துள்ளது.

ஆண்டுக்கு 25 மில்லியன் உற்பத்திக் கொள்ளளவு கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் புதிய நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையத்தின் நிர்மானப் பணிகளும் தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நன்னீர் இறால் உற்பத்தி நன்னீர் நீர்த்தேக்கங்களில் புதிதாக உயரிய பெறுமதிகள் கொண்ட மீன்பிடிச் செயற்பாடுகளாக விருத்தியடைந்து வருவதுடன் அது பயன்மிக்க அந்நிய நாட்டுச் செலாவனியினை உழைப்பதை போன்று அபிவிருத்தியும் அடைந்து வருகின்றது. நன்னீர் இறால் ஏற்றுமதிச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள 03 நிறுவனங்கள் உள்ளன. அரச மற்றும் தனியார் பங்குடமை வேலைத்திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கங்களில் நன்னீர் இறாலினை உருவாக்குவதும் அதிகரித்துச் செல்கின்றது. இவை மிகவும் ஊக்குவிக்கக்கூடிய முன்னேற்றங்களைக் காண்பிப்பதுடன் நீர்த் தேக்கங்களின் நன்னீர் இறாலினை உருவாக்குவதனை மேம்படுத்துவதற்கும் இச் செயற்பாடுகள் உதவியாக அமைந்துள்ளன.




இதன் மூலம் நன்னீர் இறால் உற்பத்தி அதிகரித்து முழு நாட்டிலும் அந்நிய நாட்டுச் செலாவணி உழைப்பும் விருத்தியடைந்துள்ளது. செய்கைகளின் முகாமைத்துவ மற்றும் சமூகப் பங்களிப்புக்களை பெற்றுக் கொண்டு பெருந்தோட்டப் பிரிவுகளில் மீன் வாவிகளை தாபிப்பதற்காக உதவுவதற்கும் விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக அமைவது பெருந்தோட்ட சமூகத்திற்கிடையில் போசாக்கினை மேம்படுத்தல் மற்றும் பெருந்தோட்ட குடும்பங்களுக்கு மேலதிக வருமானத்தை வழங்குவதாகும். நுவரெலியா, கண்டி, காலி, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் கேகாலை உட்பட பெருந்தோட்ட மாவட்டங்களில் இவ் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் தேசிய நீரியல் வாழ் உயிரின அபிவிருத்தி அதிகார சபை மூலம் செவனப்பிட்டிய (பொலன்னறுவை மாவட்டம்), உடவளவ (இரத்தினபுரி மாவட்டம்) மற்றும் முறுத்தவெல (ஹம்பாந்தோட்டை மாவட்டம்) மூன்று புதிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி நிலையங்கள் நிர்மானிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நன்னீர் மற்றும் நீரியல் வாழ் செய்கை ஊடாக மீன் இனப்பெருக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் போசாக்கு மட்டத்தை விருத்தி செய்வதற்காக தெற்கு உட்பட வடமாகாண பிரதேசங்களின் நீர்த்தேக்கங்களில் இவற்றை வளர்ப்பதற்காக மீன் சினைகளை அதிகரிப்பதற்கு இச் செயற்பாடுகள் மூலம் முடிந்துள்ளது.

கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட மீன்பிடிக் கைத்தொழிலுக்காக விவசாயச் செய்கை நீர்த்தேக்கங்களை கூடுதலாகப் பயன்படுத்துவதற்கு மேலதிகமாக கரையோரம் சார்ந்த பின்பிஸ், கடல்பாசி, மோதா மட்டி, கடலட்டை, மற்றும் நன்னீர் இறால் செய்கை போன்ற வர்த்தக ரீதியிலான பயன்கொண்ட நீரியல் வாழ் செய்கையினை அபிவிருத்தி செய்யும் பணிகள் சமூக, தனியார் பிரிவின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளமையும் நீரியல் வாழ் செய்கையின் மற்றுமொரு துறையாக அமைந்துள்ளது.

இதனால் 2016 ஆம் ஆண்டில் நீரியல் வாழ் செய்கை உற்பத்தியின் பரம்பல் பல்வகைத் தன்மையில் ஆரம்பிக்கப்பட்டது. மிகுந்த ஊக்குவிக்கக்கூடிய விடயமாக அமைந்துள்ள கடலட்டைகள் போன்றவற்றின் மூலம் வெற்றிகரமான முறையில் இனப்பெருக்கங்களை மேற்கொள்ள முடிகின்றமையும் விசேடமாக குறிப்பிட முடியும்.

அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திக்காக ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடன் தேசிய நீரியல் வாழ் உயிரின அபிவிருத்தி அதிகார சபை புதிய அலங்கார மீன் வகைகளை




அறிமுகப்படுத்தல் உட்பட அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளுக்கு புதிய தொழில்நுட்பம், காப்பு மத்திய நிலையங்களுக்கு வழங்குதல், மீனுக்காக நோய் வகைகளை இனங்காண்பது, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது.

ரம்படகல்ல மற்றும் கினிகத்ஹேன அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் மூலம் அலங்கார மீன் மற்றும் கடல்பாசி இனப்பெருக்க செயற்பாட்டினை விருத்தி செய்வது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. ரம்படகல்லையில் நிர்மானிக்கப்பட்ட ஆக்கமூலப்பொருள் ஆய்வு மத்திய நிலையத்தின் மூலம் அலங்கார நீரியல் வாழ் உயிரின ஆக்க மூலங்கள் உற்பத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பிரதான நோக்கமாக அமைவது தொழில்நுட்பப் பரிமாற்றல்கள் மற்றும் நீரியல் வாழ் செடி ஏற்றுமதி ஊடாக அந்நிய நாட்டுச் செலாவணியை உழைப்பதாகும். தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகார சபை மூலம் Aqua Agri நிறுவனம் அலங்கார கடல்பாசி மூலங்களை உற்பத்தி செய்யும் ஆய்வுகூடத்தில் உற்பத்தி செய்யப்படும் நீரியல் வாழ் செடிகளை மாத்திரம் கொள்வனவு செய்வது தொடர்பில் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகார சபை உணவு மற்றும் விவசாய அமைப்பு Sustainable Intensification of Aquaculture for Blue Growth in Asia-Pacific Projects இல் பிராந்திய அங்குராட்பண செயற்பாடுகளின் கீழ் புதிதாக 04 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது,

அ) மேற்பார்வை பரிசோதனைக்கமைய சிறிய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்ட இனப்பெருக்க மத்திய நிலையங்களைத் தாபித்தல்.

ஆ) நீரியல் வாழ் செய்கை பெறுமதிக்கமைய அபிவிருத்தி செய்வதற்கான வியூகங்களை விருத்தி செய்தல்.

இ) மீன் மரபணு விஞ்ஞானம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் சார்ந்த மானிட வளக் கொள்ளளவினை விருத்தி செய்வது தொடர்பில் தொழில்நுட்ப உதவியினை பெற்றுக் கொள்ளல்.

ஈ) செய்கை மேற்கொள்ளப்பட்ட கூனி இறால் Acute Hepatopancreatic Necrosis Disease (AHPND) நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தல் மற்றும் அதனை முகாமைத்திற்குட்படுத்தல்.

**திரு. நிமல் சந்ரரத்ன (B.Sc, M.Sc)**
**பணிப்பாளர் நாயகம்**
**தலைமை நிர்வாக அதிகாரி**

# 7. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

திரு. நுவன் பிரசந்த மாதவன் ஆரச்சி (தலைவர்)

திரு. சரத் பிரியந்த பண்டார

திரு. எல். எச். ஈ. திரிலந்த த சில்வா

திரு. கலு ஆரச்சிகே சரத் சாமிந்த

திரு. ஆர். டப்ளியூ. தயாரத்ன

டாக்டர். தயா எதிரிசிங்க

திரு. ஹேமால் குணசேகர

திரு. ஜீ. பி. ஜனக குமார

திருமதி. ஆர். எம். சீ. எம். ஹேரத்

திருமதி பீ. எச். ஹந்துன்ஹேவ

திரு. எஸ். எம். டீ. எல். கே. த அல்விஸ்

திருமதி ஆர். எச். எம். பீ. அபேகோன்

செல்வி. எல். டி. டீ. தாமர பெரேரா

# 8. உயர் முகாமைத்துவம்

திரு. பி. என். சந்ராரத்ன (பணிப்பாளர் நாயகம் / தலைமை நிர்வாக அதிகாரி)

திருமதி. ஜே. எம். அசோக (பணிப்பாளர் - கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி

திரு. எச். எம். யூ. கே. பி. பீ. ஹேரத் (பணிப்பாளர் - நன்னீர்

செல்வி. கே. பீ. சி. புஷ்பலதா (பணிப்பாளர் - விரிவாக்கல்)

திரு. கே. என். ஏ. திசாநாயக்க (பணிப்பாளர் - நிதி)

திரு. டப்ளியூ. எம். ஐ. கே. விஜேசேகர (பணிப்பாளர் - மனிதவள முகாமைத்துவம்)

# 9. இடைநிலை முகாமைத்துவம்

**திரு. எஸ்.டி.விதானகே** (நீரியல்வாழ் செய்கை பொறியியலாளர்)

**திருமதி டி.சுமனரத்ன** (சட்டவியலாளர்)

**திரு. எம்.டி.நந்தசிரி** (உள்ளகக் கணக்காய்வாளர்)

**திருமதி டப்ளியூ.பி.ஆர்.சந்ரரத்ன** (மீன் நோயியல் நிபுனர்)

**திரு. ஆர்.எச்.பொதுவில** (உதவிப் பணிப்பாளர் பயிற்சி)

**திரு. எம்.ஜீ.ஜீ.குணசேன** (உதவிப் பணிப்பாளர் - விரிவாக்கல்)

**திரு.எம்.வி.தர்மதாஸ** (உதவிப் பணிப்பாளர் - நன்னீர்)

**திரு. ஏ.ஆர்.முதலிகே** (மீன் மரபியல் நிபுனர்)

**திரு. எம்.பி.விதானகே** (மீன் போசாக்கு)

**திரு. எம்.யூ.டப்ளியூ.முதுநாயக** (உதவிப் பணிப்பாளர் - நன்னீர்)

**திரு. சபுமொஹொட்டி** (உதவிப் பணிப்பாளர் - விரிவாக்கல்)

**திரு. கே.எம்.டீ.எம்.சோமரத்ன** (உதவிப் பணிப்பாளர் - நன்னீர்)

**திரு. சமிந்த லக்மால்** (உதவிப் பணிப்பாளர் - கரையோரம்)

**திரு. டப்.ஏ.ஜே.ஆர்.பர்னாந்து** (உதவிப் பணிப்பாளர் - விரிவாக்கல்)

**திரு. பி.நிருபராஜ்** (உதவிப் பணிப்பாளர் - கரையோரம்)

**திரு. எஸ்.எச்.ஏ.சிறிகுமார** (உதவிப் பணிப்பாளர் - நன்னீர்)

**திரு. ஆர்.எம்.கீர்த்திசிரி** (உதவிப் பணிப்பாளர் - நன்னீர்)

**திரு. ரவி குமார்** (உதவிப் பணிப்பாளர் - கரையோரம்)

**திரு. எஸ்.எஸ்.சந்திரகீர்த்தி** (உதவிப் பணிப்பாளர் - விரிவாக்கல்)

**திரு. சீ.எஸ்.ஐ.பதிரன** (உதவிப் பணிப்பாளர் - நன்னீர்)

**திரு. ஆர்.எம்.என்.பி.கே.ரணதுங்க** (உதவிப் பணிப்பாளர் - கரையோரம்)

**திரு. டப்.சீ.ஜயவீர** (உதவிப் பணிப்பாளர் - கரையோரம்)

**திரு. ஏ.எம்.டி.என்.எஸ்.அத்தப்பத்து** (உதவிப் பணிப்பாளர் - கரையோரம்)

**திருமதி எப்.எச்.ஏ. யஸ்மினா** (உதவிப் பணிப்பாளர் - நிதி)

# 10. பணிப்பாளர் சபை அறிக்கை

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர்கள் 2016 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வு நிதி அறிக்கையுடன் வருடாந்த அறிக்கையையும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றனர்.

### வர்த்தக மீளாய்வு

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான அறிக்கை தலைவரின் அறிக்கையுடன் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள மீளாய்வுகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிமாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் முழுமையான மீளாய்வு அரச கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு அறிக்கை மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட நிலைமைகள்

1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 1999 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) தாபிக்கப்பட்டது. இலங்கை நீரியல் வாழ் செய்கை மற்றும் உள்நாட்டு கடற்றொழில் கைத்தொழில் ஆகிய துறைகளை விருத்தி செய்வதற்காக தாபிக்கப்பட்ட ஒரேயொரு அரச நிறுவனம் இவ் அதிகார சபையாகும். தற்போது இந்நிறுவனம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

### பணிப்பாளர் சபை

2016 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) பணிப்பாளர் சபையின் 14 அங்கத்தவர்களைக் கொண்டமைந்திருந்தது.

| அங்கத்தவர்களின் பெயர் | பதவி மற்றும் அலுவலகம் | நியமனத் திகதி |
|---|---|---|
| 1. திரு. உபாலி மொஹொட்டி (சட்டத்தரணி) | தலைவர் (நெக்டா) | 30/10/2015 |
| 2. திரு. கே.ஜி.ஏ. குணரத்ன | சபை உறுப்பினர் | 30/10/2015 |
| 3. திரு. டப்.ஜ. தீபால் பீரிஸ் | | 30/10/2015 |
| 4. திரு. விதுர பத்ரஜித் ரத்னாயக்க வீரகோன் (சட்டத்தரணி) | சபை உறுப்பினர் | 30/10/2015 |
| 5. திரு. நெல்சன் வன்னியாராச்சிக்கே அபேகுணவர்தன | சபை உறுப்பினர் | 30/10/2015 |
| 6. திருமதி பி.எச். ஹந்துன்ஹேவா | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (ஏற்றுமதி விவசாயம் மற்றும் கமநல சேவைகள்) விவசாய அமைச்சு, கொவிஜன மந்ரய, பத்தரமுல்ல. | 20/07/2015 |
| 7. திரு. துசித அளுத்படபெத்திகே | தலைவர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 24/07/2015- 26/08/2016 |
| 8. திரு. ஜகத் குமார பெரேரா | தலைவர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 06/09/2016 |
| 9. வைத்தியர் அனில் பெரேரா | தலைவர் (நாறா) | 30/10/2015 |
| 10. திரு. எம்.சி.எல். பர்னாந்து | பணிப்பாளர் நாயகம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் | 08/05/2015 |
| 11. திருமதி ஆர்.எம்.சி.எம். ஹேரத் | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் நிருவாகம்) இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை | 19/04/2015 |
| 12. பொறி. எஸ்.எம்.டி.எல்.கே. டி அல்விஸ் | பணிப்பாளர் (நீர் வள முகாமைத்துவம்) நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சு | 27/04/2016 |
| 13. திருமதி. ஆர்.எச்.எம்.பி. அபேகோன் | பணிப்பாளர் (உயிரியல் முறைமை) சுற்றுசூழல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு | 22/07/2016 |
| 14. திருமதி. ஹிரன்சா களுதந்ரி | பணிப்பாளர் (முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்) | 20/03/2015 - 25/11/2016 |

பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பங்கேற்பு - 2016

| இல. | பணிப்பாளர்களின் பெயர் | நியமனத் திகதி | கூட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | திரு. உபாலி மொஹொட்டி (சட்டத்தரணி) | 10/30/2015 | 12 | 12 |
| 2. | திரு. கே.ஜி.ஏ. குணரத்ன | 10/30/2015 | 12 | 9 |
| 3. | திரு. டப்.ஜ. தீபால் பீரிஸ் | 10/30/2015 | 12 | 9 |
| 4. | திரு. விதுர பத்ரஜித் ரத்நாயக்க வீரக்கோன் (சட்டத்தரணி) | 10/30/2015 | 12 | 11 |
| 5. | திரு. நெல்சன் வன்னியாராச்சிகே அபேகுணவர்தன | 10/30/2015 | 12 | 12 |
| 6. | திருமதி பி.எச். ஹந்துன்ஹேவா | 07/20/2015 | 12 | 11 |
| 7. | திரு. துசித அளுத்படபெத்திகே | 26/08/2016 | 12 | 7 |
| 8. | திரு. ஜகத் குமார பெரேரா | 09/06/2016 | 12 | 2 |
| 9. | வைத்தியர். அனில் பெரேரா | 10/30/2015 | 12 | 9 |
| 10. | திரு. எம்.சி.எல். பர்னாந்து | 05/08/2015 | 12 | 6 |
| 11. | திருமதி ஆர்.எம்.சி.எம். ஹேரத் | 04/19/2016 | 12 | 6 |
| 12. | பொறி. எஸ்.எம்.டி.எல்.கேச. டி அல்விஸ் | 04/27/2016 | 12 | 4 |
| 13 | திருமதி. ஹிரன்சா களுதந்ரி | 07/22/2016 | 12 | 7 |
| 14 | திருமதி. ஆர்.எச்.எம்.பி. அபேகோன் | 20/03/2015-25/11/2016 | 12 | 4 |

**கணக்காய்வுக் குழு**

- திரு. கே.ஜி.ஏ. குணரத்ன
- திரு. என்.டப். அபேகுணவர்தன
- திருமதி. ஹிரன்சா களுதந்ரி
- திருமதி. பி.எச். ஹதுன்கேவா
- திருமதி. ஜி.எஸ்.எஸ்.ஜி. பெரேரா

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**நோக்கு மற்றும் பணிக்கூற்று**

தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கள் பக்க இலக்கம் 5 மற்றும் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளரினால் ஒரு வருடத்திற்குரிய நிதியறிக்கை கணக்காய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வர்களை நியமிப்பதை உறுதிப்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட பணிப்பாளர் சபைப் பத்திரம் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அதிகார சபையின் பணியாளர்கள்

| வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 05 |
| இடைநிலை முகாமையாளர்கள் | 11 |
| இளைய முகாமையாளர்கள் | |
| நீரியல் வாழ் உயிரின ஆய்வாளர்கள் | 42 |
| பிராந்திய / மாவட்ட நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் | 18 |
| புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள் | 03 |
| கணணி ஆய்வாளர் | 01 |
| பெறுகை உத்தியோகத்தர்கள் | 01 |
| சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 01 |
| நிதி உத்தியோகத்தர்கள் | 01 |
| நிருவாக உத்தியோகத்தர்கள் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் | |
| உதவி நீரியல் வாழ் உயிரின ஆய்வாளர் | 15 |
| விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் | 97 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 03 |
| புத்தகம் கட்டுனர் | 01 |
| பணிப் பொறுப்பாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத ஆரம்ப மட்டம் | 70 |
| சாரதிகள் | 42 |
| சிற்றூழியர்கள் | 292 |
| **மொத்த எண்ணிக்கை** | **605** |

### தொடர்ச்சியான நிலைப்பாடுகள்

அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் எதிர்கால நோக்கிற்காக அதிகார சபையிடம் காணப்படும் போதியளவு வழங்கல் கொண்டதாக பணிப்பாளர் சபையினால் திருப்தியடைவர். இதனால் நிதியறிக்கை தொடர்ச்சியான நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது..

### நிதியறிக்கை

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் நிதி அறிக்கை இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தரங்கள், 1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை சட்டம் மற்றும் அதன் மறுசீமைப்புக்கள் உட்பட பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட நிதி மூலங்கள் மற்றும் தொடர்ந்தும் உரியதான நிதி மூல அம்சங்களுக்கமைய தொடர்ச்சியான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது தேவையான நியாயமான மற்றும் துாரநோக்கு அடிப்படையிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வருமானம்

2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் வருமானமாக அமைவது ரூபா 105,254,468.35 ஆகும்.

### மூலதனச் செலவினம்

நிதிப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு ஆண்டுக்குள் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான மூலதனச் செலவினமாக அமைவது ரூபா 47,723,068.98 ஆகும்.

### நிலையியற் கொடுப்பனவுகள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் விளக்கத்துடன் மற்றும் நம்பிக்கைக்கமைவாக அரசாங்கத்திற்கு மற்றும் அரச அதிகார சபை ஊழியர்களுக்கு அதிகார சபையினால் செலுத்த வேண்டிய நிலையியற் சபைக் கொடுப்பனவுகள் உரிய காலத்திற்குள் மேற்கொள்வது தொடர்பில் திருப்தியடைந்துள்ளது.

### கடந்த கால ஐந்தொகை நிலைமைகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் எந்தவொரு ஒப்பீடுகள் அல்லது வெளிப்பாடுகள் இடம்பெறவில்லை.

பணிப்பாளர் சபையின் உத்தரவிற்கிணங்க,

.........................................
பணிப்பாளர் சபைச் செயலாளர்
இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை
அபிவிருத்தி அதிகார சபை

(சட்ட அதிகாரி)
திருமதி. டி.சுமனரத்ன
சட்ட வழக்கறிஞர் (எல். எல். பீ)

# 11. பணிப்பாளர்களின் வாழ்த்துச் செய்தி

## 11.1 பணிப்பாளர் - கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி

இலங்கையில் அலங்கார மீன் மற்றும் கரையோரத் தாவர உற்பத்தி தொடர்பான செயற்பாடுகள் கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது. கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவின் கீழ் பயிற்சி மத்திய நிலையம், அலங்கார மீன் இனப்பெருக்க நிலையம், இரண்டு நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் அதேபோன்று இரண்டு கரையோர நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் மற்றும் மேற்பார்வை அலகுகள் அடங்கியுள்ளன.

**கூனி இறால் பண்ணை**

இலங்கையில் கரையோர நீரியல் வாழ் செய்கைச் செயற்பாடுகளில் கூடுதலான வருமானத்தை ஈட்டக்கூடியதாக இறால் பண்ணை வர்த்தகம் அமைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு இறால் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி முதல் சுட்டியைக் காண்பிக்கின்றது. கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் இறால் செய்கை கண்காணிப்பு மற்றும் விரிவாக்கல் நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் நோய்க்குட்படக்கூடிய நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக தலையீடுகளை மேற்கொண்டு தடுப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.








வெள்ளைப் புள்ளி நோயினால் அழிவடைந்த இறால் கைத்தொழிலை மீள் கட்டியெழுப்புவதற்காக தேசிய நீரியல் வாழ் செய்கை அதிகார சபையின் இறால் உருவாக்குவதற்கான மேற்பார்வை மற்றும் விரிவாக்கல் பிரிவினால் கடந்த சில மாதங்களாக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒல்லாந்தர் கால்வாயின் சேற்றினைத் தோண்டுதல். செய்கை நாட்காட்டிகள் மற்றும் வலய ரீதியில் வேறுபடுத்துவதையும் அறிமுகப்படுத்தல், உரிய சட்டங்கள் மற்றும் கோவைகளைத் தயாரித்தல், இறால் இனப்பெருக்க நிலையத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் இறாலுக்குப் பின்னர் குஞ்சிகளை காக்கும் தளங்களை நுனுக்கமாக ஆய்விற்குட்படுத்தல், அதற்கு மேலதிகமாக பத்துலுஓயாவில் அமைந்துள்ள இறால் நோயினை இனங்காண்பதற்கு மற்றும் சுகாதார முகாமைத்துவ பரிசோதனையின் போது இறால் செய்கையில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு இறால் நோயினை இனங்காணக்கூடிய வகையில் மற்றும் சேவைகளை வழங்க 2016 ஆம் ஆண்டில் "ஊசு நோயக்கான மாதிரிகள் 1013 பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் செயற்பாட்டு பண்ணைகளின் அளவு 1300 ஹெக்டேயர் ஆகும். புத்தளம் மாவட்டத்தில் தனியார் இறால் இனப்பெருக்க நிலையங்களின் மூலம் 533 மில்லியன் குஞ்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் செய்கையில் ஈடுபட்டுள்ள பிரதேசம் 106 ஹெக்டேயர் ஆகும். 2016 ஆம் ஆண்டில் அரச/ தனியார் பங்குடமையின் கீழ் தனியார் நிறுவனம் ஒன்றினால் நிர்வகிக்கப்பட்ட இறால் இனப்பெருக்க நிலையங்கள் மூலம் 21.4 மில்லியன் குஞ்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 18.4 மில்லியன் குஞ்சிகள் அளவு நீர்த்தேக்கங்களில் இடப்பட்டன.



கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு - பத்துலுஓயா, புத்தளம் மாவட்டம்



இறால் நோய் ஆய்வு மற்றும் சுகாதார முகாமைத்துவ ஆய்வுகூடம் - பத்துலுஓயா

**நன்னீர் இறால் செய்கை**

2016 ஆம் ஆண்டில் 20 மில்லியன் கொள்ளளவு கொண்ட புதிய இனப்பெருக்கத் தொட்டியினை விரிவுபடுத்தும் செயற்பாடுகள் நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையமான கஹந்தமோதறையில் மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று 10 மில்லியன் நன்னீர் இறால் சினைக்குப் பின்னரான மேலதிக உற்பத்திகளை விரிவாக்கும் செயற்பாடுகள் நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையமான பம்பலையிலும் முன்னெடுக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் தனியார் தொட்டிகள் மற்றும் வாவிகளில் 39.64 மில்லியன் குடம்பிகள் வாவி மற்றும் குளங்களில் விடப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் நன்னீர் இறால் உற்பத்தியின் மூலம் 705 மெ.தொன் மற்றும் 101 மெ.தொன் நன்னீர் இறால் ஏற்றுமதி செய்வதன் ஊடாக 224 மில்லியன் ரூபா அந்நிய நாட்டுச் செலாவணியினை ஈட்ட முடிந்தது. 2016 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு மொத்த தேறிய அடிப்படையில் 846 மில்லியன் ரூபா பெறுமதியான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.





நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையம் - கஹந்தமோதற



நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையம் - பம்பல

## அலங்கார மீன் செய்கை






அலங்கார மீன் உற்பத்திக் கைத்தொழில் இலங்கையில் விரிவாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கைகளின் ஏற்றுமதி பெறுமதி ரூபா. 1847 மில்லியனாகும். அலங்கார மீன் செய்கை மற்றும் நீரியல் வாழ் செய்கை உட்பட ஏற்றுமதி வர்த்தகத்திற்காக உதவி வழங்கும் நோக்குடன் தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி நிறுவகம் புதிய அலங்கார மீன் வகைகளை அபிவிருத்தி செய்வதற்கு, தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு, பாதுகாப்பு தளங்களை தாபிப்பதற்கு, மீன் இனங்ளுக்கான நோய்களை இனங்காண்பதற்கு, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. ரம்படகல்ல மற்றும் கினிகத்ஹேன நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் அலங்கார மீன் மற்றும் பயன்மிக்க செய்கைகள் தொடர்பில் அற்பணிப்புடன் செயற்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் 92,713 பாதுகாப்பு அணைகளுக்குள் அலங்கார மீன் 1.75 மில்லியன் இவ் அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டது. ரம்படகல்ல நிலையத்தில் ஆக்க மூலப்பொருள் தயாரிப்பு பரிசோதனை ஆய்வு நிலையம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அலங்கார செடி கொடிகளின் ஆக்க மூலங்களின் உற்பத்தியினை விருத்தி செய்தல் பரிசோதனை ஆய்வுகூடத்தின் பணியாகும்.

அலங்கார செடி ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய நாட்டுச் செலாவணியை உழைப்பதற்காக தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பட்டம் எதிர்பார்ப்போர்களுக்காக தொழில்நுட்ப பரிமாற்றல்கள் மற்றும் அலங்கார செடி வகைகளின் பரம்பலை விரிவுபடுத்தவும் இவ் ஆக்க மூலப்பொருள் உற்பத்திப் பரிசோதனை ஆய்வு கூடத்தின் பிரதான நோக்கமாகும். ஆக்க மூலப்பொருள் பரிசோதனை ஆய்வுகூடத்தின் ஊடாக 44,220 தாவரங்கள் உற்பத்தி செய்ய முடிவதுடன் 2016 ஆம் ஆண்டில் 40,880 தாவரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 26 பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் ரம்படகல்ல அலங்கார மீன் இனப்பெருக்க மற்றும் பயிற்சி நிலையத்தின் மூலம் 696 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அலங்கார மீன் செய்கை தொடர்பில் ஆர்வம் காண்பிக்கும் நபர்களின் அறிவினை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தியாளர்களுக்காக புதிய அலங்கார மீன் வகைகளை அறிமுகப்படுத்துவதும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அலங்கார மீன் மற்றும் அலங்கார தாவரங்களுக்காக ஏற்றுமதிக் கேள்வியினை மேம்படுத்தும் நோக்குடன் “மின் விசிதுரு - 2016” என்ற அலங்கார மீன் நீரியல் தாவரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான கண்காட்சி தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தக் கண்காட்சி அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டதுடன். சுமார் 35,987 பேர் கண்காட்சியில் பங்கேற்றனர்.





“ மின் விசிதுரு - 2016”

### ஏனைய கரையோரம் சார்ந்த நீரியல் வாழ் செய்கைச் செயற்திட்டங்கள்

சீபாஸ் செய்கை மேற்கொள்ளல், நண்டு செய்கை, கடல் பாசி செய்கை, கடல் அட்டை செய்கை போன்ற ஏனைய கரையோரம் சார்ந்த நீரியல் வாழ் செய்கைச் செயற்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் தேசிய நீரியல் வாழ் செய்கை அதிகார சபையின் நீரியல் வாழ் செய்கைப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டன. உற்பத்தி தொடர்பான தகவல்கள் 2 வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.






கடற்பாசி வளர்ப்பு



நண்டு வளர்ப்பு



கடலட்டை வளர்ப்பு



மொதா வளர்ப்பு

### 2017 ஆம் ஆண்டிற்கான புதிய செயற்திட்டங்கள்

(1) மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லின கடல்வாழ் செட்டை மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் தாபித்தல்.
(2) மன்னார் மாவட்டத்தில் நீர் உயிரின வளர்ப்பு முதலீடு ஊக்குவிப்பு மண்டலம் தாபித்தல்.
(3) திருகோணமலை மாவட்டத்தில் நன்னீர் இறால் வளர்ப்பு மத்திய நிலையம் தாபித்தல்.
(4) மன்னார் மாவட்டத்தில் கடலட்டை இனவிருத்தி நிலையம் தாபித்தல்.
(5) நண்டுகள் விற்பனை மையம் தாபித்தல்.
(6) பொலன்னறுவை மாவட்டத்தில் அலங்கார மீன் இனவிருத்தி நிலையம் தாபித்தல்.

**ஆசிரியர். திருமதி ஜெ.எம். அசோகா**
பணிப்பாளர்,
(கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி)

## 11.2 பணிப்பாளர் - நன்னீர் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவு

நீரியல் வாழ் உயிரினங்கள் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை மேற்கொள்ளல் நீரியல் வாழ் உற்பத்தி செய்கையாகக் கருதப்படுவதுடன், இது நன்னீர், உவர் நீர் மற்றும் கடல் நீரில் மேற்கொள்ள முடியும். 2016 ஆம் ஆண்டில் நன்னீர் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி நாட்டின் மொத்த உயிரியல் வாழ் செய்கை உற்பத்தியின் 90% பங்களிப்பு வரை காணப்படுகின்றது. காப் விசேட மற்றும் திலாப்பியா விசேடங்களும் இங்கு பிரதானமானவைகளாகும்.

2016 ஆம் ஆண்டில் மொத்த நன்னீர் மீன் உற்பத்தி 73,930 மொ.தொன் என்பதுடன் இதன் 54,780 மெ.தொன் காப் விசேடங்கள் மற்றும் திலாப்பியா விசேடங்கள் காணப்படுகின்றன. இவ் உற்பத்தியினைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையில் பாரிய, மத்திய மற்றும் சிறிய நீர்த்தேக்கங்கள் அதேபோன்று பருவகால நீர்த்தேக்கங்கள் மற்றும் தோட்ட நீர்த்தேக்கங்களுக்காக வருடாந்த தேசிய திட்டமிடலின் கீழ் மீன் சினைகள் இடப்படுவதுடன் வேறு நீரியல் வாழ் செய்கை முறைகளுக்காகவும் (உ-ம்: வாவிகள், கூடுகள் மற்றும் தொட்டிகள்) செய்கையாளர்களுக்கு மீன் சினைகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு இந்நீர்த்தேக்கங்களில் இடப்படும் மற்றும் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் மீன் குடம்பி உற்பத்தியின் முன்னனித் தேசமாக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை நன்னீர் நீரியல் வாழ் செய்கைப் பிரிவினால் நிர்வகிக்கப்படும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையமாகும். இதற்கமைய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவின் கீழ் தம்புள்ள, இங்கினியாகல, உடவளவ (காப்), உடவளவ (திலாப்பியா), கலாவெவ, இரணமடு, நுவரெலியா மற்றும் முறுதவெல ஆகிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்கள் செயற்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் குடம்பி (காப் விசேட மற்றும் திலாப்பியா விசேட) எண்ணிக்கையில் 54% இம்மத்திய நிலையங்களினால் நேரடியாக உற்பத்தி செய்யப்பட்டதுடன் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சிறியளவு மீன் சினை உற்பத்தி அலகுகள் மற்றும் தனியார் மீன் சினை உற்பத்தி வாவிகளின் உரிமையாளர்கள் உட்பட கூடு செயற்திட்டம் மற்றும் தொட்டி செயற்திட்டங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த குடம்பகளின் உற்பத்தியில் 46% மாகும். இது எவ்வாறாக இருப்பினும் இச்சகல குஞ்சிகள் மற்றும் சினை உற்பத்தி செய்யப்படுவது அதிகார சபையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நீரியல் வாழ் செய்கை மத்திய நிலையங்கள் மூலமாகும்.

2016 ஆம் ஆண்டில் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களிலிருந்து 137.3 மில்லியன் சினைகள், 112.3 மில்லியன் குடம்பிகள், 37.3 குஞ்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் உற்பத்தி செய்யப்படும் மொத்த சினைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் இதன் அளவு 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 30% துரித அதிகரிப்பாகும். நன்னீர் பிரிவின் இலக்காக அமைந்திருப்பது குடம்பிகளின் அளவு வெளிச் செய்கையாளர்களுக்கு வழங்கி மொத்த குஞ்சிகளின் உற்பத்தியினை மேம்படுத்துவதாகும். இதற்கமைய 2015 ஆம் ஆண்டில் மொத்த சினைகளை வெளியிடல் 52.2 மில்லியனாகும். 2016 ஆம் ஆண்டில் இது 69.8 மில்லியன் வரை அதிகரித்துடன் மதிப்பீடுகளுக்கமைய இது 14.6 மில்லியன் அதிகரிப்பாகும்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உயிரியல் வாழ் செய்கை மத்திய நிலையங்களில் சினை, குடம்பி, குஞ்சி உற்பத்திகள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றன.




நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் விசேடங்களுக்கமைய விகிதாசாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.




விசேடமாக வடமத்தி மற்றும் தெற்குப் பிரதேசங்களில் கிராமிய மக்களின் புரத நுகர்வினை மேம்படுத்துவதற்கும் வருமானத்தை விருத்தி செய்யக்கூடிய வகையிலும் நீர்த்தேக்கங்களில் இடுவதற்குத் தேவையான மீன் சினை உற்பத்தியினை மேம்படுத்தும் வகையில் இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் பொலன்னறுவை மாவட்டத்தில் செவனப்பிட்டிய, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முறுத்தவெல, இரத்தினபுரி மாவட்டத்தில் உடவளவ பிரதேசங்களில் 03 நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களைத் தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

புத்தெழுச்சி பெறும் பொலன்னறுவை வேலைத்திட்டத்தின் கீழ் செவனப்பிட்டிய நீரியல் வாழ் செய்கை மத்திய நிலையத்திற்கு 400 மில்லியன் ரூபா மற்றும் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உடவளவ புதிய மத்திய நிலையத்திற்காக 250 மில்லியன் ரூபா நிதியும் செலவிடப்படவுள்ளது. அரசாங்கத்தின் பொதுத்திறைசேரி நிதியின் மூலம் 400 மில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கப்படும் முறுத்துவெல புதிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் நாட்டின் தெற்கு பிரதேசத்தில் மீன் சினையின் தேவையில் கூடுதலான அளவினைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



முறுத்துவெல நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம்



பொலன்னறுவை நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம்

திரு. எம்.எம்.யு.கே.பி.பி. ஹேரத் (B.Sc, M.Sc)
(பணிப்பாளர் - நன்னீர்)

# 11.3 பணிப்பாளர் - நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி விரிவாக்கல் பிரிவின் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

நீரியல்வாழ் செய்கையை அடிப்படையாகக் கொண்ட மீன்பிடிக் கைத்தொழிலின் முகாமைத்துவத்தை விருத்தி செய்வதற்காக மற்றும் நீரியல் வாழ் செய்கையினை விருத்தி செய்வதன் மூலம் மீன் உணவு உற்பத்தியினை மேம்படுத்துவது நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் பிரிவின் பிரதான பொறுப்பாகும். இதற்காக 22 மாவட்ட நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் 100 நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் உட்பட முழு நாட்டையும் தழுவக்கூடிய வகையில் நீரியல் வாழ் செய்கை விரிவாக்கல் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.




வரைபு 01 : உள்நாட்டு மீன் மற்றும் மீன்வளர்ப்பு உற்பத்தி 2012 - 2016



படம் 1 : நீர்த்தேக்கங்களில் மீன் அறுவடை

இடப்படும் மீன் குடம்பிகளின் எண்ணிக்கையினை மேம்படுத்துவது நன்னீர் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய பிரதான மூல உபாயத் திட்டமாகும். தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை உற்பத்தி நிறுவனத்தின் நீரியல் வாழ் உயிரினச் செய்கை மத்திய நிலைங்களில் மீன் குடம்பி உற்பத்திக்கு மேலதிகமாக நன்னீர் நீர்த்தேக்கங்களில் செய்கையினை அடிப்படையாகக் கொண்டு கடற்றொழில் கைத்தொழிலுக்காக பயன்படுத்துவதற்கு சமூக பங்கேற்பின் மூலம் மீன் குடம்பிகளின் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக ஊக்குவிப்புச் செயற்பாடுகள் செயற்பாட்டு மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிமாக மீன் குடம்பி உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக சமூக பங்கேற்புடன் 22 மீன் சினை உற்பத்திப் பிரிவுகள் நாடுபூராகவும் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுக்குள் 10.08 மில்லியன் மீன் குடம்பிகளை உற்பத்தி செய்ய முடிந்துள்ளது. நீர்த்தேக்கங்களில் இடுவதற்காக தேவையான மீன் குடம்பிகளின் அளவினை உற்பத்தி செய்வதற்காக நீர்த்தேக்கத்திற்குள் கூடுகளை நிர்மானித்து மீன் சினைகள் உருவாக்கப்படுகின்றன. மீன் சினைகளை மீன் குடம்பி கட்டம் வரை விருத்தி செய்வதற்காக போசாக்கினை வழங்க மற்றும் வலைக்கூடுகள் மற்றும் கூடுகளைப் பராமரிப்பது தொடர்பில் ஏனைய செயற்பாடுகள் கடற்றொழில் சமூகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன. சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட மீன் விதை உற்பத்தி அலகு, கூடுகளைப் பயன்படுத்தி 21 மில்லியன் மீன் குடம்பிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் அது 2016 ஆம் ஆண்டில் மொத்த மீன் குடம்பி உற்பத்தியில் 31% மாகும். எதிர்காலத்தில் கூடுகளைப் பயன்படுத்தி மீன் குடம்பி உற்பத்தியினைத் தொடர்ந்தும் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.




வரைபு 02 : 2016 ஆம் ஆண்டில் மீன்குஞ்சு உற்பத்தி அமைப்பு முறை



படம் 2 : கண்டி விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மிதக்கும்வலை, கூடுகளில் சினைகளை உருவாக்குதல்



படம் 3 : சமூகம் சார்ந்த மீன் பண்ணைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்றொழில் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக "குளத்துடன் கிராமம்" சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரவேச வீதி, தறையிறங்கும் இடங்களில் வசதிகளை விருத்தி செய்தல், சமூக சேவை மண்டப நிர்மானிப்பு, ஆரம்பப் பாடசாலை வசதிகளை விருத்தி செய்தல், சுத்தமான நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குதல் போன்றன. 2016 ஆம் ஆண்டில் 25 மில்லியன் ரூபா செலவிட்டு இவ் வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட ஒருசில பொது உட்கட்டமைப்பு வசதிகளாகும்.

கடற்றொழில் சமூகத்தை வலுவூட்டும் செயற்திட்டம் உத்தியோகத்தர்களினால் அமுல்படுத்தப்பட்ட நன்னீர் கடற்றொழில் முகாமைத்துவச் செயற்பாடாகும். நன்னீர் நீர்த்தேக்கங்கள் / நீர் வகைகள் சார்ந்த சுற்று நிதி ஏற்படுத்தப்பட்டது. மீன் அறுவடையின் போது அவ்வவ் மீன் கிலோகிராமில் ரூபா 20.00 ஐ சேகரித்து இந்நிதியத்தை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் இவ்வாறான நிதியம் மீன் சினைகளைக் கொள்வனவு செய்தல், கூடுகளை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டன. தற்போது கடற்றொழில் சங்கங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த நிதி அளவு 120 மில்லியன் ரூபா என்பதுடன் எஞ்சிய 05 ஆண்டுகளுக்குள் இந்நிதியத்தை 10 மடங்குகளினால் அதிகரிக்கத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. சூழல் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதன் மூலம் சட்ட விரோத மீன்பிடிச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக நீர்த் தேக்கங்களில் மீன்பிடிச் செயற்பாடுகளை முகாமைத்துவத்திற்குட்படுத்துவதற்காக அவ்வாறு மேற்கொள்வதன் தேவை நிலையான சந்தர்ப்பங்களில் 500 நன்னீர் படகுகள் மாத்திரம் மீன்பிடி படகுத் துறைக்காக இணைக்கப்பட்டுள்ளது. படகுகளை பதிவு செய்தல் மற்றும் மீனவர்களுக்கு செயற்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதும் நீரியல் வாழ் செய்கை உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.



மீனவர்களுக்கு ஓடங்கள் பகிர்ந்தளிக்கப்படல்

தொழில்நுட்ப அறிவினைப் பகிர்தல் மற்றும் திறமைகளை விருத்தி செய்வது நீரியல் வாழ் செய்கை வேலைத்திட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாகும். அனுராதபுரம் கலாவெவயில் அமைந்துள்ள தேசிய நன்னீர் மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் நீரியல் வாழ் செய்கை பயிற்சி நிறுவனம் (NIFATI) பிரபல்யத்தைப் போன்று மிகவும் பயன்மிக்க பயிற்சி மத்திய நிலையமாக மாற்றம் பெற்றுள்ளது. இதன் மூலம் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் அடிப்படைப் பிரிவு தனியாக பிரயோகப் பயிற்சி மற்றும் துறைசார் அறிவினை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் அடிப்படைப் பிரிவாக தனியான பிரயோகப் பயிற்சி மற்றும் ஆய்வு ரீதியிலான அறிவு தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது. நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கைச் செயற்பாடுகளின் அபிவிருத்தி உட்பட ஊக்குவிப்புக்களுக்காக பங்களிப்புக்களை வழங்குவதற்கு மேலதிகமாக அது நிதி ரீதியில் தன்னிறைவடைந்த நிறுவனமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

செல்வி கே.பீ.சி. புஷ்பலதா (B.Sc, MA,M Phil
(பணிப்பாளர் - விரிவாக்கல்)

## 11.4 நீரியல் வாழ் செய்கைப் பொறியியலாளரின் வாழ்த்துச் செய்தி

நீரியல் வாழ் செய்கை பொறியியலாளர் பிரிவு கட்டட வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் செயற்பாட்டு முன்னெடுப்பு உட்பட வாவிகளின் மேற்பார்வை, கூடுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் உள்ளிட்ட பணிகளை முன்னெடுக்கின்றது.

கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவின் கீழ் அனைத்து நிர்மானச் செயற்பாடுகளுக்கான பெறுகைகள் உள்ளிட்ட செயற்பாடுகளை நீரியல் வாழ் செய்கை பொறியியல் பிரிவு மேற்கொள்கின்றது. நீரியல் வாழ் செய்கை நிறுவனத்துடன் இணைந்த தொழிற் துறைகள், தொழில் முயற்சியாளர்கள் பங்குடமையாளர்களுக்கு தொழில்நுட்ப விடயங்கள் குறித்தும் அது சார்ந்த செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக ஆரம்ப கட்டச் செயற்பாடுகள் விரிவாக்கல் பிரிவு மற்றும் நன்னீர் அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து முன்னெடுக்கின்றது.

### 2017/ 2018 ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்படவுள்ள பாரிய செயற்திட்டங்கள்

I. "புத்தெழுச்சி பெறும் பொலன்னறுவை" திட்டத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் செவனப்பிட்டிய வெலிக்கந்த பிரதேசத்தில் புதிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தைத் தாபித்தல்.

II. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முறுத்துவெல நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தை புணரமைத்தல்.

III. உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இங்கினியாகல மற்றும் கலாவெவ உள்நாட்டு மீன் வளர்ப்பு பயிற்சி நிறுவகம், தம்புள்ள உடவளவ (திலாப்பியா) ஆகிய நீரியல் வாழ் செய்கை மத்திய நிலையங்களை புணரமைத்தல்

IV. உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் உடவளவ பிரதேசத்தில் புதிதாக நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தைத் தாபித்தல்.

V. திருகோணமலை மாவட்டத்தின் கல்லறாவ பிரதேசத்தில் நன்னீர் இறால் தொட்டிகளைத் தாபித்தல்.

VI. மன்னார் மாவட்டத்தின் ஒல்லித்துடை பிரதேசத்தில் கடல் அட்டை தொட்டிகளைத் தாபித்தல்.

VII. மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் நண்டு வளர்ப்பு செயற்திட்டங்களை தாபித்தல்.

VIII. புத்தளம் மாவட்டத்திலுள்ள பங்கதெனிய பிரதேசத்தில் கடல் அலங்கார மீன் வலைகுடாவைத் தாபித்தல்.

IX. புத்தளம் மாவட்டத்திலுள்ள பங்கதெனிய பிரதேசத்தில் பால்மீன் வலைகுடாவைத் தாபித்தல்.

X. மன்னார் மாவட்டத்தில் மீன் வளர்ப்பு தொழிற்சாலை பூங்கா அமைத்தல்.

XI. பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள செவனப்பிட்டிய பிரதேசத்தில் அலங்கார மீன் இனப்பெருக்க நிலையம் தாபித்தல்.

XII. புத்தளம் மாவட்டத்தில் நொப்ளியா மையத்தை தாபித்தல்.

XIII. ADB செயற்திட்டத்தின் கீழ் நடைபெறும் வட மாகாண நிலையான "மீன் வளர்ப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடற்பாசி இனப்பெருக்க, கடலட்டை இனப்பெருக்க மற்றும் கரையோர நீர் உயிரின வளர்ப்பு பயிற்சி நிலையம் தாபிப்பதற்கு பங்களிப்பு வழங்குதல்.

XIV. கரையோர வளங்கள் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வலுவான மற்றும் கஹதமோதர நன்னீர் இறால்களின் இனப்பெருக்க நிலையத்தினை விரிவாக்க மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தல்.

**பொறி. எஸ்.டி.விதானகே**
நீரியல் வாழ் செய்கை பொறியியலாளர்

# 12. மனித வள அறிக்கை

இலங்கை நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகள்
2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

| வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 05 |
| இடைநிலை முகாமையாளர்கள் | 11 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | |
| விவசாய ஆய்வாளர் | 42 |
| பிராந்திய/ மாவட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் | 18 |
| புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள் | 03 |
| கணனி பகுப்பாய்வாளர்கள் | 01 |
| பெறுகை உத்தியோகத்தர்கள் | 01 |
| சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| நிதி உத்தியோகத்தர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் | |
| உதவி விவசாய ஆய்வாளர் | 15 |
| விரிவாக்கல் உத்தியோகத்தர் | 97 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 03 |
| புத்தகம் பேணுனர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் - திறன்சாரா | 70 |
| ஆரம்ப மட்டம் | |
| சாரதிகள் | 42 |
| சிற்றூழியர்கள் | 292 |
| மொத்தம் | 605 |

## உறுதிப்படுத்தப்பட்ட பிரதிலாபத் திட்டங்கள் - பணிக்கொடை

சேவையின் ஆரம்ப ஆண்டு தொடக்கம் சேவையின் அவ்வவ் ஆண்டுகளுக்காக அரை மாதச் சம்பளத்தின் மூலம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

இது எவ்வாறாக இருப்பினும் 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திற்கமைய ஊழியர் ஒருவருக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக அதிகார சபையின் பொறுப்பாக அமைவது அவ் ஊழியர் அதிகார சபையின் 5 வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னராகும்.

## ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியம்

உரிய சட்டங்கள் மற்றும் கோவைகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு தகைமை பெறுகின்றனர். ஊழியர் பொறுப்பு நிதியம் மற்றும் சேமலாப நிதியத்திற்காக அதிகார சபையினால் ஊழியர்களுக்கு சம்பளத்திலிருந்து தொடராக 15% மற்றும் 3% பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

- **பயிற்சி**
  - உள்நாடு 30
  - வெளிநாடு 47

- **கடன்கள்**
  - **இடர் கடன்**
    நிரந்தர ஊழியருக்கு வழங்குதல்.
    உயர்ந்தபட்ச தொகை : Rs.250,000
  - **துவிச்சக்கரவண்டி கடன்**
    நிரந்தர ஊழியருக்கு வழங்குதல்.
    உயர்ந்தபட்ச தொகை: Rs.10,000.00
  - **பாடசாலை புத்தகப் பை கொள்வனவு**
    நிரந்தர ஊழியருக்கு வழங்குதல்.
    உயர்ந்தபட்ச தொகை : Rs.4,000.00
  - **மருத்துவக் காப்புறுதித் திட்டம்**
    நிரந்தர ஊழியருக்கு வருடாந்த தங்கி
    சிகிச்சை பிரதிலாபங்கள் : Rs.100,000.00
    வெளிநோயாளர் தழுவல் Rs.5,000.00
  - **விழா முற்பணம்**
    நிரந்தர ஊழியருக்கு வழங்குதல்.
    உயர்ந்தபட்ச தொகை : Rs.10.000.00

**திரு. டப்ளியூ.எம்.ஐ.கே.விஜேசேகர** (B.Sc (HRM) Sp.
(பணிப்பாளர் - மனிதவளப் பிரிவு)

# 13. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்ட அறிக்கை 2016

1999 ஆம் ஆண்டில் தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) தாபிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இதன் நோக்கத்தினை வெற்றிகரமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான நோக்கங்களாக அமைவது,

- ❖ எதிர்வரும் ஆண்டுக்குள் நன்னீர் மற்றும் மீன் / இறால் உற்பத்தி தற்போது உற்பத்தியான 52,410 மெ.தொன் தொடக்கம் 87,106 மெ.தொன் வரை அதிகரிப்பது.
- ❖ பயிற்சி மற்றும் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை சுய தொழில்களை ஆரம்பித்தல்.
- ❖ ஏற்றுமதி உற்பத்தியை உருவாக்குவதற்காக அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் தாவரச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் தற்போதைய மட்டமாக 3% தொடக்கம் 10% வரை உலக சந்தையில் இலங்கைப் பங்கினை அதிகரித்தல்.
- ❖ எதிர்வரும் 03 ஆண்டுகளுக்குள் ஏற்றுமதிக்கான இறால் உற்பத்தி 3,480 மெ.தொன் தொடக்கம் குறைந்தபட்சம் 5,790 மெ.தொன் வரை மேம்படுத்தல்.
- ❖ சேதனப் பசளை விவசாயச் செயற்பாடுகளுக்காக இறால் உடன் இடைக்கால செய்கைக்காக மாற்று மீன் வள விசேட வகைகளுக்காக உரிய செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- ❖ சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு தொழில் முயற்சியாளர்களாக ஊக்குவிப்பதற்காக நீரியல் வாழ் உயிரின முறைமைகளில் பொருளாதார இயலுமைகளைக் காண்பிப்பதற்காக நீரியல் வாழ் செய்கை வர்த்தகச் செயற்பாடுகளில் அரச / தனியார் துறையின் பங்கேற்பினை விருத்தி செய்தல்.
- ❖ சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையாகப் பாதுகாக்கும் வகையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செயற்பாடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்பார்வை மற்றும் முன்னோடிச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

தற்போது 600 க்கு மேற்பட்ட ஊழியர்கள் அதிகார சபையில் சேவையாற்றுகின்றனர். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2003 ஜூலை இறுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உள்ளீடு மற்றும் செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாளர் சபை | | | வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிரந்தரம் | அடிப்படைப் பயிலுனர் | பயிலுனர் பயிற்சி | | |
| 03 | - | - | 07 | 02 |

கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துவது கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணிகள் என்பதுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டச் செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்வுக் குழுவினால் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றனர்.

| இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நியமிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 01 | திருமதி. ஹிரன்சா களுதந்ரி | தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | பொதுத் திறைசேரி |
| 02 | திரு. என்.டப். அபேகுணவர்தன | அங்கத்தவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | விடயத் திற்குப் பொறுப்பான அமைச்சர் |
| 03 | திரு. கே.ஜி.ஏ. குணரத்ன | அங்கத்தவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | விடயத் திற்குப் பொறுப்பான அமைச்சர் |

இதற்கு மேலதிகமாக திருமதி. ஜீ.எஸ்.எஸ்.ஜீ பெரேரா (கணக்காய்வு உத்தியோகத்தர்) கணக்காய்வாளர் சார்பில் பங்கேற்றார். கூட்டத்திற்காக பணிப்பாளர் நாயகம் மற்றும் திணைக்களப் பொறுப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். குறைந்தபட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் 04 காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டில் குழுத் தலைவரின் இராஜினாமா மற்றும் பொதுத் திறைசேரியினால் புதிய தலைவர் ஒருவரை நியமிப்பதில் தாமதம் காரணமாக அவ்வாண்டில் இரண்டு கணக்காய்வுக் குழு கூட்டங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. 2016 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்ட தினங்களில் கூட்டம் நடாத்தப்பட்டது.

- முதலாவது கூட்டம் - 2016.05.11 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- இரண்டாவது கூட்டம் - 2016.07.29 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுவதுடன் உள்ளகக் கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் சபைச் செயலாளரினால் கூட்ட அறிக்கைக் குறிப்புக்கள் பேணப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் கூட்டங்களுக்காக பங்கேற்பு தொடர்பிலான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| குழு அங்கத்தவரின் பெயர் | கூட்டம் நடாத்தப்பட்ட தினங்கள் | |
|---|---|---|
| | **2016.05.11** | **2016.07.29** |
| திருமதி. ஹிரன்சா களுதந்ரி | பங்கேற்பு | பங்கேற்பு |
| திரு. என்.டப். அபேகுணவர்தன | பங்கேற்பு | பங்கேற்பு |
| திரு. கே.ஜி.ஏ. குணரத்ன | பங்கேற்பு | பங்கேற்பு |

## கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் பொறுப்புக்கள்.......

- பணிப்பாளர்களுக்கிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான கேந்திர நிலையமாக வெளித்தரப்பினர் மற்றும் அவர்களின் கடமைகள் தொடர்பில் முகாமைத்துவம் தொடர்பாக செயற்படுவதற்கு நிதி மற்றும் ஏனைய அறிக்கைப்படுத்தல்கள், உள்ளக நிருவாகம் உட்பட கணக்காய்வு தொடர்புபடுவதுடன் சுயாதீன மீளாய்வினை வழங்குவதன் மூலம் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சபைக்கு உதவுவது நிதியறிக்கைப்படுத்தல், அதிகார சபை உள்ளக நிருவாகத்தின் வினைத்திறன் மற்றும் கணக்காய்வின் செயற்திறன் தொடர்பில் திருப்தியடைய வேண்டும்.

- அதிகார சபையின் நிதித் தகவல்களை மீளாய்விற்குட்படுத்தல்.

- வெளி மற்றும் உள்ளகக் கணக்காய்வு உட்பட பதிலினை மீளாய்விற்குட்படுத்தல்.

- கணக்காய்வு சேவைகளை வழங்குவதற்காக வெளிக் கணக்காய்வாளரின் பங்கேற்பு தொடர்பில் கொள்கையை வகுத்தல் மற்றும் அமுல்படுத்தல்.

- கணக்காய்வுத் திட்டங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பரிந்துரைகளை வழங்குதல்.

- முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்குவதற்கு அவசியமான செயற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் மதிப்பீட்டுக்குட்படுத்தி பரிந்துரைகள் உட்பட அடையாளங்கள் சபையினால் அறிக்கைப்படுத்தப்படும்.

## மேற்கூறப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக,

- உள்ளகக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் அல்லது வெளிக் கணக்காளர் தகைமை வாய்ந்த நிறுவனத்தினால் எழுப்பப்படும் விடயங்கள் தொடர்பில் கருத்திற் கொண்டு அது சார்ந்த விடயங்களை பிரதிபலிக்கக்கூடிய கணக்காய்வு அறிக்கை தேவைப்படக்கூடிய அசாதாரண பொருட்கள் அல்லது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் கணக்காய்வுக் குழுவினால் கவனம் செலுத்தப்படும்.

- நிதி மற்றும் உள்ளக நிர்வாக முறைமையினை மேற்பார்வை செய்தல்.

- அதிகார சபையின் நிதி நிருவாகம், உள்ளக நிருவாகம் மற்றும் அவதான முகாமைத்துவ முறைமையினை மீளாய்விற்குட்படுத்தல்.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் எழுந்துள்ள விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிக்கைப்படுத்தல்.

கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சகல அறிக்கைகளும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**திரு. எம்.டீ.நந்தசிரி**
உள்ளகக் கணக்காய்வாளர்

# 14. கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எப்எல்எஸ்/ஏ/என்ஏகியூடீஏ/1/16/21    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2017 ஒக்டோபர் 20

தலைவர்,
இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை

**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபை (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

---

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைப் புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

2.2.1 **இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01

---

நியமத்தின் 70 மற்றும் 71 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிதி அறிக்கைத் தினத்திற்கு 12 மாதங்களுக்கு முன்பும் 12 மாதங்களுக்குப் பின்பும் அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் சொத்துக்கள், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டுமாயினும், நிறுவனத்தின் இடர் கடன் மீதியாகிய ரூபா 44,549,328 அவ்வாறாக வகைப்படுத்தப்பட்டுக் காண்பிக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07

---

(i) நியமத்தின் 47 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது நியாயபூர்வமான பெறுமதியானது

அதன் நிகழ் பெறுமதியுடன் போதுமானவளவு வேறுபடும் சந்தர்ப்பத்தில் வருடாந்த மீளப்பெறுமதியிடலுக்கு உட்படுத்தப்படுவதும் போதியளவில் அல்லாத வேறுபாடுகளுடன் சொத்துக்கள், பொறித்தொகு மற்றும் உபகரணங்களின் பொருட்டு அடிக்கடி மேற்கொள்ளப்படும் மீளப் பெறுமதியிடல் தேவையற்றபோதும், 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீளப் பெறுமதியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டின் பின்னர் அதிகார சபையின் சகல சொத்துக்களும் மீளப் பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 64 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களது பயன்படு காலத்திற்கான வருடாந்தத் தேய்மானத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமாயினும், அதற்கு முரணாக, தொழில்நுட்பக் காரணங்களின் நிமித்தம் விரைவாகப் பயன்படு காலத்தை இழக்கக்கூடிய கணனி மென் அணிகள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றின் பயன்படுகாலத்தைப் 10 ஆண்டுகள் எனக் கருதியவாறு தேய்மான ஏற்பாடுகளை அதிகார சபை மேற்கொண்டிருந்தது.

(இ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 08

-----------------------------------------------------------------------------------------

நியமத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம், வெளி நபர்களால் அதிகார சபைக்கு எதிராக 2011 ஆம் ஆண்டில் தொடுத்த வழக்கின் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 12,734,000 இழப்பீடாக வழங்க வேண்டியேற்பட்டது. இதற்கு நிதியேற்பாடு முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான செலவினமும் பற்றாக்குறையும் அதேயளவு அதிகரித்திருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

-----------------------------------------------------

மீளாய்வாண்டின்போது 06 பால் கறக்கும் பசுக்களது பெறுமதி ரூபா 309,945 ஆகக் கணிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் 01 ஆம் இலக்கத்தினது 132(இ) பிரிவின் பிரகாரம் அவ்வாறாகப் பெறுமதியைக் கணிப்பிடுகையில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை தெளிவுபடுத்தப்படாததுடன், நிகழ் பெறுமதியினது அதிகரிப்பால் மிகையாக உருமாறிய ரூபா 209,995 மீளப் பெறுமதியிடல் ஒதுக்கத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டுமிருந்தது.

2.2.3 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறுதிக் கையிருப்பைக் கணிப்பிடும்போது மீன் வளர்ப்பு நடவடிக்கைகளுக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 361,958 பெறுமதியான வலைக் கையிருப்பு அதில் உள்ளடக்கப்படாததால் இறுதிக் கையிருப்பு அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முடிவடைந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் 175 சந்தர்பங்களுடன் தொடர்புடைய ரூபா 1,543,141 கூட்டுத் தொகையான நேரடி வங்கிச் செலவு வைத்தலை இனங்கண்டு கணக்கலிடுவதற்குப் பதிலாக மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அவை காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் மார்ச் 30 ஆந் திகதி தொடக்கம் பயன்படுத்தப்பட்டவாறிருந்த ரூபா 6,500,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பொருட்டு மீளாய்வாண்டில் ரூபா 975,000 தேய்மானச் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உடவளவை திலாபியா நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,967,756 பெறுமதியான சேற்றுத் தடாகம் 2016 சனவரி 12 ஆந் திகதியன்று முடிவடைந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும், குறித்த சொத்தை மூலதனமாக்காது நடைபெறும் வேலையாகக் கணக்கிலிட்டதால் அதற்குரிய தேய்மானமாகிய ரூபா 114,183 கணக்கிலிடப்படாது தவிர்க்கப்பட்டிருந்தது.

(உ) நிறுவனத்தின் பொறியிளலாளருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட வேலைத்தள மேற்பார்வைக் கட்டணம், குழு அங்கத்தவர் கட்டணம் மற்றும் அறிவுப்புக் கட்டணமாகிய ரூபா 387,051 நிர்வாகச் செலவினமாகக் காட்டப்படாது நடைபெறும் வேலையாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

2.2.4 **கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
| --- | --- | --- |
| திவிநெகும - சுழற்சி நிதியம் | 32,679,030 | (i) மீண்டும் அறவிடப்படுதல் தொடர்பான விபரமடங்கிய பதிவேடு<br>(ii) கடன்பட்டோரது காலப் பகுப்பாய்வு |
| திவிநெகும - மீன்குஞ்சுகளது கையிருப்பு | 1,258,960 | வகைப்படுத்தல் பதிவேடு |

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீன் குஞ்சுகளை விற்பனை செய்தமையால் ஏற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 13,739,176 ஆகும். இதில் 05 வருடங்களைக் கடந்த ரூபா 3,041,702 மற்றும் 03 ஆண்டுகளைக் கடந்த ரூபா 1,779,992 என்பவற்றை அறவிடும் நடவடிக்கை மந்த கெதியில் நடைபெற்றவாறிருந்தது.

(ஆ நிதிக் கூற்றுக்களில் 05 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளடக்கப்பட்டவாறிருக்கும் நிறுத்தி வைத்த பணம் (WHT) ரூபா 363,329 ஆகும். இதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2001 முதல் 2011 வரை ஒப்பந்தகாரர்களது நிறுத்தி வைத்த பணக் கணக்கில் இருந்து வரும் ரூபா 8,377,714 மீதியை இனங்கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 751 | நூலகத்தில் பெறப்படும் சகல புத்தகங்களும் பதிவேட்டில் பதியப்பட வேண்டுமாயினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலகத்தில் இருந்த சகல புத்தகங்களும் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், துணைப்பாகங்கள், மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (இ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 மற்றும் 3.1.7 ஆம் பந்திகள் | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வை நடாத்தி அவ்வறிக்கையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கவில்லை. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதிக்கூற்றக்களுடன் ஆண்டறிக்கையினது வரைவு சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக நிலவிய வாடகைக் கொள்வனவுக்கு உரிய வாடகையாகிய ரூபா 403,594 மற்றும் இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கின் ரூபா 149,203 என்பன முறையே சட்டச் செலவினக் கணக்கு மற்றும்

ஏனைய வருமானக் கணக்கு என்பவற்றிலிருந்து மீளாய்வாண்டின்போது பதிவழிக்கப்பட்டிருந்தன. எனினும், இதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

---

**3.1 நிதிப் பெறுபேறு**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அதிகார சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 36,533,378 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,443,032 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேறு ரூபா 47,976,410 நலிவுற்குள்ளாகியிருந்தது. அரச மானியம் மற்றும் பிற்போட்ட வருமானம் என்பன முறையே ரூபா 26,509,750 மற்றும் ரூபா 21,270,580 என்பவற்றால் அதிகரித்தபோதும், நிர்வாகச் செலவினமும் விநியோகச் செலவினமும் முறையே ரூபா 63,475,658 மற்றும் ரூபா 26,957,218 என்பவற்றால் அதிகரித்தமை மேற்படி நலிவுக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டினது ரூபா 20,364,390 பற்றதக்குறையானது 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 11,443,032 வரை மிகையாக அதிகரித்திருந்தபோதும், மீண்டும் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 36,533,378 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானமும் ஊழியர்களது ஊதியமும் மீண்டும் நிதிப் பெறுபேற்றில் சீராக்கல் செய்யப்படுகையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 208,579,857 ஆகவிருந்த அதிகாரசபையின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 377,818,292 வரை அதிகரித்திருந்தது.

**3.2 நிறுவனத்திற்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்**

---

மீண்டும் வேலையில் அமர்வதற்காக ஊழியர் ஒருவரால் நிறுவனத்திற்கு எதிராக 2015 யூன் 22 ஆந் திகதியன்று வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் அதன் கடமைகள் பின்வருமாறு.

(அ) நாட்டில் மீன் உற்பத்தி மற்றும் நுகர்வை அதிகரிக்கும் நோக்குடன் குளங்கள், ஆறுகள், கரையோர மற்றும் சமுத்திர நீரியல்வாழ் உயிரின உற்பத்தியைப் பெருக்குவதும் அதன் மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதும் மேம்படுத்துவதும்.

(ஆ) ஏற்றுமதிக்கான அலங்கார மீன் விசேடத்துவம் அடங்கலாக கூடிய பெறுமதியுடைய மீன் உற்பத்தியை மேம்படுத்துதலும் நீர் உயிரின உற்பத்திக்குத் தனியார் துறையினது சிறிய, நடுத்தர மற்றும் பெரியளவிலான முதலீடுகளை மேம்படுத்தல், வசதிகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

(இ) உயிரியல் பல்வகைப்படுத்தலைப் பாதுகாக்கும் பொருட்டு நீர் உற்பத்தி மற்றும் உயிரியல் வாழ் உற்பத்திச் செயற்பாடு என்பவற்றிற்கு பயன்படுத்தப்படும் நீர் வளம் மற்றும் நிரந்தரமானதும் காலத்துக்குக் காலம் அமையும் விதத்திலான நீர்த்தேக்க உற்பத்தியின் அடிப்படையில் கடற்றொழில் துறையை முகாமைத்துவமிடுதல், பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல் பொருட்டு திட்டமிடப்பட்டதும் சுற்றாடலுக்கு உகந்ததுமான உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமைத்து அவற்றை அமுல்படுத்துதல்.

(ஈ) நீர் வள இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், வழங்குநர் மற்றும் விநியோகத்தர் என விற்பனைகளில் ஈடுபட்டிருப்போருக்கும் அப்பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உதவி வழங்குதல் போன்ற இன்னோரன்னவை.

மீளாய்வாண்டின்போது மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுதல் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயிரியல் பல்வகைப்படுத்தல் பாதுகாக்கப்படும் பொருட்டு நீர் உற்பத்தி மற்றும் உயிரியல்வாழ் உற்பத்திச் செயற்பாடு என்பவற்றிற்கு பயன்படுத்தப்படும் நீர் வளம் மற்றும் நிரந்தரமானதும் காலத்துக்குக் காலம் அமையும் விதத்திலான நீர்த்தேக்க உற்பத்தியின் அடிப்படையில் கடற்றொழில் துறையை முகாமைத்துவமிடுதல், பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல் பொருட்டு திட்டமிடப்பட்டதும் சுற்றாடலுக்கு உகந்ததுமான உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமைக்கப்பட்டு அமுலாக்கப்படவில்லை.

(ஆ) அதிகாரசபையால் நன்னீர்த் தடாகங்களில் மீன் குஞ்சுகளை இடுவதானது 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின்போது 12.6 மில்லியனால் அதிகரித்திருந்தது. மீன் குஞ்சுகளை இடுவதன் மூலம் பெறப்படும் செயல் முன்னேற்றத்தை (உற்பத்தியின் பின்) அளவிடுவதற்கும் முன்னேற்றுவதற்குமான கணிப்பையும் ஆராய்ச்சியையும் மேற்கொள்ளவில்லை. இது தொடர்பாக அரசாங்கத்தின் ஒரேயொரு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமான நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினூடாக மீன் உற்பத்தியை மேம்படுத்தலுக்கான ஆலோசனைகளையும் ஆராய்ச்சிகளையும் செய்துகொள்ள எத்தனிக்கவில்லை.

(இ) 2011 முதல் 2016 வரை உற்பத்தியாகிய நன்னீர் மீன் குஞ்சுகள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டின்போது மீன் குஞ்சுகளது உற்பத்தி 40.98 மில்லியனாக இருந்ததுடன், விளைச்சலின் உற்பத்தி 70,600 மெட்றிக் தொன்னாகவும் இருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மீன் குஞ்சுகள் 66.47 மில்லியனால் அதிகரித்திருந்தபோதும், மீன் உற்பத்தி 67,480 மெட்றிக் தொன் வரை குறைவடைந்திருந்தது.

(ii) 2011 முதல் 2016 வரை மீன் முட்டை உற்பத்தியானது 83.10 மில்லியன் தொடக்கம் 112.27 மில்லியன் வரை 29.17 மில்லியனால் அதிகரித்தபோதும், மீன் குஞ்சுகளது உற்பத்தி அதற்கொப்பாக அதிகரித்திருக்கவில்லை.

(iii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் நன்னீர் வாழ் உயிரின உற்பத்தி முறையே 10,390 மெட்றிக் தொன் மற்றும் 3,120 மெட்றிக் தொன் என குறைவடைந்திருந்தது.

(iv) 2015, 2016 ஆம் ஆண்டுகளது தகவல்களின் பிரகாரம் முறையே 11 மாவட்டங்களில் 25 முதல் 73 சதவீதம் வரையாகவும் 06 மாவட்டங்களில் 23.5 முதல் 75 சதவீதம் வரையாகவும் மீன் குஞ்சுகளை இடும் இலக்கை அடைய முடியாது போனமை அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனஞ் செலுத்தியிராததுடன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையை அமைத்ததன் மூல அடிப்படையாகிய மீன் வள மேம்பாடு எனும் நோக்கம் போதியளவு ஈடேறவுமில்லை.

(v) 2015, 2016 ஆம் ஆண்டுகளின்போது கம்பஹ, களுத்துறை, மாத்தறை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள நன்னீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை இடுவதற்கென அதிகார சபையால் இலக்கிடப்பட்ட எண்ணிக்கை முறையே 0.334, 0.345, 0.349, 0.054 மில்லியன் என்பனவாகும். எவ்வாறாயினும், அம் மாவட்டங்களில் அதனை ஈடுசெய்வதற்கான எந்தவொரு வேலையும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கமைய, நன்னீர் மீன் உற்பத்திக்கும் மற்றும் நுகர்வு முன்னேற்றத்திற்கும் கடற்றொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் எனும் நோக்கங்கள் நிறைவேறவில்லை.

(ஈ) நாட்டில் மீன் உற்பத்தி மற்றும் நுகர்வு என்பவற்றை முன்னேற்றும் நோக்குடன் நன்னீர், குளத்து நீர், கரையோர மற்றும் சமுத்திர நீர் வாழினங்களை உற்பத்தி செய்து முன்னேற்றுவது மற்றும் அதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்கி, மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளின்போது திவிநெகும கடன்திட்டத்தின் வாயிலாக 6450 நலன்பெறுநர்களுக்கு ரூபா 229,035,250 ஐ நிறுவனம் வழங்கியிருந்தபோதும், அந்நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் காரணங்களால் தோல்வியைத் தழுவியிருந்தது.

- நலன்பெறுநர்களைத் தெரிவு செய்கையில் அப்பிரதேசங்களில் நிலவும் நீர்ப் பற்றாக்குறை கவனத்திற் கொள்ளப்படாமை.
- நலன்பெறுநர்களுக்கு முறையாகப் பயிற்சி அளிக்கப்படாமை.
